

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# பாபுஜியின் பாபு

(சிறுவர் நவீனம்)

பூவை எஸ். ஆறுமுகம்
(தமிழக அரசின் பரிசில் பெற்ற ஆசிரியர்)

பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை - 600 014 திருச்சி - 620 002
சேலம் - 636 001 கோயமுத்தூர் - 641 001
மதுரை - 625 001 ஈரோடு - 638 001

முதற்பதிப்பு—ஜனவரி, 1992

விலை : ரூ. 9-90

ஒளியன் அச்சகம், சென்னை - 600 014

# மகாத்மாவுக்கு வணக்கம்

அண்ணல் காந்தியடிகள் உலகம் போற்றும் உத்தம சீலர் ஆவர்; ஒழுக்கம், வாய்மை, சத்தியம் முதலிய உயரிய குணங்களின் இருப்பிடமாவார். அத்தகைய மாமனிதரின் நன்னெறிகளை இன்றைய இளைய சமுதாயம் அறிய வேண்டியது அவசியம். எனவே, காந்திஜியின் படிப்பினைகளைக் கொண்ட சிறுவர்க்கான இந்நவீனத்தை உருவாக்கியிருக்கின்றேன்.

காந்தி மகாத்மா தெய்வ மனிதராக வாழ்ந்தார்; வாழ்ந்து காட்டினார்; மனித தெய்வமாக வாழ்கின்றார்; வாழ்வார்.

'ஒழுக்கம் இல்லாவிட்டால், வெறும் படிப்பினால் என்ன பயன்?' என்று கேட்கின்றார்கள் அடிகள்.

அவ்வொழுக்கம் பிஞ்சு உள்ளங்களிலே தொடக்கம் தொட்டே வளர்க்கப்பட வேண்டும். இக்கனவு நனவாக, அவர்கள் படிக்கும் கதைகளும் ஒழுக்கத்தை வலியுறுத்துவனவாய்த் திகழ வேண்டும்.

இக்குறிப்பினை ஓர் இலட்சியமாக — ஒரு தவமாகக் கருதியே! 'உமா'வில் சிறுவர்க்காகப் பலவற்றை எழுதியிருக்கிறேன்.

பாபுவின் கதை பெரிது. அக்கதைக்குப் பாபுஜி துணை நிற்கின்றார். அண்ணல் என் தொழுகைக்குரிய இறை.

பாபு என் உள்ளத்தைத் தொட்டுவிட்டான்.

உங்கள் உள்ளங்களையும் தொடுவான்.

அவன் — அந்த அநாதை ஏழைச் சிறுவன்—நம் தம்பி தங்கைகளுக்கு நல்வழி காட்ட வேண்டும்.

புகழ் கொண்ட இலக்கியப்பணி புரிந்து வரும் புகழ்பெற்ற பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தார் முன்னம் நான் எழுதிய 'ஓடி வந்த பையன்' என்ற கதையை வெளியிட்டனர். 'பூவை யின் கதைகள்' என்ற என் நூலுக்குத் தமிழக அரசு முதற் பரிசளித்துப் போற்றிய அந்நிகழ்ச்சிக்கு மற்றுமோர் ஆறுத லாக இந்நவீனம் விளங்கும்.

என்னுடைய இலட்சியக் கனவுக்கு ஓர் உன்னத உருவம் கொடுத்த பாபுவுக்கு என் இதயபூர்வமான நல்வாழ்த்துகள். பாபுவின் கதையைப் படித்து உணரும் அன்புத் தம்பி தங்கை களுக்கும் என் நல்வாழ்த்துகள் !

வணக்கம்

பூவைமாநகர்,
1-12-91.

பூவை. எஸ். ஆறுமுகம்

# அன்பு கேட்காது, கொடுக்கும்!

'தமிழ் அன்னை' இல்லத்தின் முகப்பு நடையில் ஓடிக் கொண்டிருந்த அழகிய அந்தச் சுவர்க்கடிகாரத்தின் உச்சியில் இருந்த சின்னஞ்சிறு பூஞ்சிட்டு ஆறு தரம் ஒயிலுடன் குரல் கொடுத்துவிட்டு, ஓடாமல் இருந்தது!

''ஆஹா!...''

பாபு வழக்கம் போலவே அன்றும் தனக்குத்தானே சிரித்துக்கொண்டான். அவனுடைய பால்முகத்தில் புத்தம்புதிய களை பிறந்தது. வாரி விடப்படாத கிராப்புத்தலையைப் புதிய உற்சாகத்தோடு திருப்பினான்; பிறகு தன்னைத்தானே ஒரு முறை குனிந்து பார்த்துக்கொள்ளவும் தவறவில்லை. அப்போது அவனையும் மீறிய விதத்திலே அவனது அழகான கண்கள் கசியத் தொடங்கின. மறுகணம், ''தெய்வமே!'' என்று மெல்லிய குரலில் அழைத்தான். ஒரு நொடியில் அவனது கண்கசிவு மாறியது; மறைந்தது. 'கடவுளே! நான் உன்னை மறந்திட்டு, என்னை நினைச்சேன்; அழுகை வந்திச்சு; இப்போ, என்னை மறந்திட்டு, உன்னை நினைச்சேன்; சிரிப்பு வருது!... உன்னோட குஞ்சுக்குக் குறுணை போடப் பழகியவனாச்சே நீ என்கிற ஆனந்த ரகசியத்தை எப்பவோ புரிஞ்சுக்கிட்ட பொடியனாச்சே நான்!—'பாபுவின் இனிய நினைவுகள் நன்றிக் கசிவுடன் அடங்கின. அடங்காத ஆனந்தத்துடன் அவன் மீண்டும் அந்தப் பூஞ்சிட்டைப் பார்த்தான். கடமையின் உணர்வு அவனைத் தட்டி எழுப்பியது போலும்!

நடையின் கீழ்ப்புறத்தில் வந்து நின்றான் பாபு.

அவனுக்கு எதிரே பெரியதொரு வீலைக்கண்ணாடி நின்றது.

அவன் கண்கள் கண்ணாடியில் பதிந்தன.

அப்போது—

கலைந்து கிடந்த தலைமுடியும், கிழிந்து கிடந்த கால் சட்டையும், துயரம் படிந்த முகமும், நெற்றியில் படர்ந்த திருநீறும் கொண்ட ஓர் ஏழைச்சிறுவனின் அழகான — களை மிகுந்த—சின்னஞ்சிறு உருவம் தெரிந்தது.

'பாபு!...'

யார் அழைத்தார்கள்?

யாரும் அழைக்கவில்லை.

அச்சிறுவன் தான், தனக்குத்தானே அவ்வாறு அழைத்துக் கொண்டான். இடக்கை ஆள்காட்டி விரலால் விழிகளைத் துடைத்துக்கொண்டு, உருவாகியிருந்த கடமையின் புதிய தெளிவுடன் பின் வசமாய் நடந்தான் அவன். பக்தியோடு தன் பிஞ்சுக்கரங்களைக் குவித்தபடி, தலையை நிமிர்த்தினான் பாபு. "பாபுஜி!..." —அவன் இதழ்கள் பிரிந்து கூடின. தன்னை மறந்து அவன் எவ்வளவு நேரந்தான் அப்படியே நின்று கொண்டிருந்தானோ?

அவனுடைய கண்களிலிருந்து ஏன் அப்படிக் கண்ணீர் வழிந்தோடிக்கொண்டிருக்கிறது ?

அவனது கைகள் ஏன் நடுங்கிக்கொண்டிருக்கின்றன?

"டேய்... பயலே!..."

நூதனமான மெல்லிய பூந்திரையை விலக்கிக்கொண்டு வந்து நின்றார் பெரிய மனிதர் ஒருவர். அவர் பெயர் காசி. காசித்தலம் கொடுத்த புண்ணியமாக அந்தப் பெயர் இருந்திருக்கலாம்!... அவர் கையிலிருந்தது வெள்ளித்தட்டு ஒன்று. தட்டில் வெள்ளித் தம்ளர்களும் டபராக்களும் இருந்தன. அவற்றில் காப்பி இருந்தது. காப்பியில் மணம் இருந்தது.

"பாபு!... டே... பாபு!"

'பயல்' இப்போது பாபு ஆனான்.

ஆகி, என்ன பயன்?

பாபு இன்னமும் சுயநினைவு பெறவில்லையே!

காசி தொண்டையைக் கனைத்துக்கொண்டார். கச்சேரி செய்யவா?-இல்லை, இல்லை! — சிறுவனை இரு முறை அழைத்த அலுப்பைச் சரிசெய்துகொள்ளத்தான்! 'என்ன செய்கிறது இப்போ?' என்று யோசனை செய்ய வேண்டியவர் ஆனார் காசி.

என்ன, நீங்களும் யோசனை செய்யத் தொடங்கிவிட்டீர்களே! சமையற்காரரை 'ர்' விகுதி போட்டுச் சொல்கிறேனே, என்றா? ஆம்; அதுவேதான் தமிழ்ப்பண்பாடு. பெரிய மனிதர் காசி. வயதுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் அல்லவா?

காசிக்கு யோசனை வந்துவிட்டது. சற்றுமுன் தயாரித்த 'தஞ்சாவூர் டிக்ரி காபி'யில் ஒரு வாய்க்கு இரண்டு வாயாக அருந்தி வைத்த அவருக்கு யோசனை வராமல் இருக்குமா, என்ன? அப்படி வராமல் இருந்தால், அப்புறம் அவர் போட்ட காப்பிக்குத்தான் மரியாதை ஏது? "காசி, நீ காப்பி போடுற லட்சணத்துக்காகத்தான் உன்னை இந்தப் பத்து வருஷமாய் நம்ப பங்களாவிலே வேலைக்கு வச்சிக்கினு இருக்கேனாக்கும்!" என்று அவர் முதலாளி—அதாவது, காசி பணி புரியும் இந்தத் 'தமிழ் அன்னை' இல்லத்தின் தலைவரான உயர்திரு வாளர் ஆனந்தரங்கம் அவர்களே—சான்று கொடுத்துவிட்டாரென்றால், அப்புறம் காசியின் திறமைக்குக் கேட்கவே வேண்டியதில்லைதான்!

மாடிப்படிக்கட்டின் ஓரமாக இருந்த உயர்ந்த முக்காலியை வலக்காலால் இழுத்துப்போட்டு, தம் கையிலிருந்த தட்டைப் பதனமாக அதில் வைத்தார் காசி. மார்கழி மாதத்தின் குளிர் இப்போதுதான் அவருக்கு உறைக்க ஆரம்பித்தது. புதுக் கருக்கு மின்ன, பளிங்குச் சுவரில் மின்னிய அந்தப் புதிய காலண்டரையும், அதில் இருந்த கள்ளங்கவடு அறியாத சிறுவனையும், அவனுக்கு மேலே பளிச்சிட்ட '1959' என்ற இலக்கத்தையும் பார்த்துவிட்டு, அதே சடுதியில், பாபுவையும் உற்று நோக்கினார் சமையல் கலைஞர். 'பாவம்!' என்று அவரது உதடுகள் முணுமுணுத்தன. மறு கணம், அவர் நெஞ்சில் கடிகாரத்தின் இதயத்துடிப்பு எதிரொலித்தது. உடனே, பாபுவை அண்டினார்; அவனுடைய இடத்தோள்

பட்டையை அழுத்தினார். "டேய்!" என்று அதட்டினார் காசி.

கெட்ட கனவு கண்டு, வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்திருப்பவன் போன்று, பாபு ஒரு வகையான பயப்பதற்றத்தோடு கண்களைத் திறந்தான். கண்ணீர், பார்வைக்கு நந்தி ஆனது. 'சற்றே விலகியிரும், பிள்ளாய்!' என்று கண்ணீரிடம் வழி கேட்டு, விழித்துப் பார்த்தான் சிறுவன்; அதே சமயம் தன்னுடைய இடத்தோள்பட்டையைத் தன்னுடைய வலக் கரத்தால் மெல்லத் தடவிக்கொண்டான்.

"சரி, சரி, ஏய் பாபு!... மேலே காப்பி கொண்டுபோய்க் கொடுப்பா!... நேரம் ரொம்ப ஆயிடுச்சுப் போலே! அப்பாலே என் பேரிலேயும் எசமான் பாய்ஞ்சிடப்போறார்!" என்று துரிதப்படுத்திய காசி, துரிதமுடன் வெள்ளித்தட்டை—ஆமாம், காப்பி இருந்த அந்த வெள்ளித் தட்டை — எச்சரிக்கையுடன் பாபுவின் விரிந்த இரண்டு கரங்களிலும் வைத்தார். "தம்பி, உஷார்!... அன்னிக்கு நீ காப்பி எல்லாத்தையும் கொட்டிட்டதைக் கண்டு எசமான் உன்னோட தோள்பட்டையிலே பூசை கொடுத்ததை நினைச்சுக்கிட்டு போய் வா!... நாம ஏழைங்க. ஏழைபாழைங்களுக்குக் கடமைதான் எல்லாம்! இல்லாட்டி, சாண் வயிறு ஓர் அங்குலமாகிப்பிட வேண்டியதுதானே!... ஊம், போ!... போய் வா!" என்று 'குட்டிப் பிரசங்கம்' செய்தார் பெரியவர் காசி.

பாபு மிகவும் எச்சரிக்கையுடன் வெள்ளித்தட்டை ஏந்திக் கொண்டான்; பிறகு, சமையற்காரர் காசியை விநயமான சோகத்தோடு பார்த்தான். எதை எதையோ நினைத்துப் பார்த்த ஒரு பரிதாயமும், எதை எதையோ மறந்துவிட முயன்ற ஒரு துடிப்பும் அப்பார்வையில் ஊடாடியிருக்க வேண்டும்!

"ஐயா!"

"என்னாப்பா?"

"நம்ம முதலாளி ஐயா என்னை அன்னைக்கு அடிச்சது நான் செஞ்ச தப்புக்காகத்தான். எனக்கு நல்ல புத்தி வர

வேணும்னுதான் அப்படி அடிச்சிருப்பாங்க. உங்க புத்திமதிக்கும் நான் எப்பவும் மதிப்புக் கொடுக்கக் கடமைப்பட்டவன். சரி, நான் மேலே போயிட்டு வர்றேன். எனக்காக—இல்லே, காப்பிக்காக—எல்லாரும் காத்துக்கிட்டிருப்பாங்க!...''

"ஆமா, சீச்கிரம் போ, போய் வா!'' என்று சொல்லிவிட்டு, அங்கிருந்து நகரலானார் காசி. அவர் உள்ளத்திரையில் பாபு நிழலாடினான். 'பாவம், அநாதைப்பிள்ளை!...பகவானே, உன்னோட சோதனைக்கு ஓர் அர்த்தம் கண்டுபிடிக்கிறதுக்கு எனக்கே வயசு பத்தாதுன்னு நான் சதா நினைச்சுக்கிட்டிருக்கேன். ஆனா, இந்தப் பொடியன் எப்படி எப்படி அழகாய்ப் பேசறான்!...' என்று எண்ணமிட்டது அவரது உள் மனம்,

* * *

**பாபு** மாடியைக் கடந்து நடந்தான். 'லினோலியம் விரிப்பு அவன் பாதங்களுக்குச் சுகமாக இருந்தது. என்றாலும் விரிந்திருந்த கைகளின் சூடு அவனுள் ஓர் அபாய அறிவிப்பாகப் பாய்ந்துகொண்டிருக்கத் தவறிவிடவில்லை. முந்திரிக் கொட்டை போல நீட்டிக்கொண்டிருந்த சட்டையின் காலரை நாக்கினால் அடக்கிவிட்டவண்ணம் நடையைத் தொடர்ந்தான் பையன்,

அதோ, கூடம்.

அதுதான் ஆனந்தரங்கம் — அபயாம்பாள் குடும்பத்தின் படுக்கைக் கூடம். அதில் அவர்களது செல்வப்புதல்வன் ராமனுக்கும் அருமந்தப்புதல்வி சீதைக்கும் பங்கு இருந்தது.

இனம் புரியாத அச்சம் சூழ, பாபு அவ்வறையை எட்டிப் பார்த்தான். 'முதலாளி எங்கே?' என்று அவன் தனக்குத்தானே கேட்டுக்கொள்ள வேண்டியவன் ஆனான். காரணம், அங்கு அப்பொழுது லட்சாதிபதி ஆனந்தரங்கம் காட்சி தரவில்லை! 'காப்பிக்காக எதிர்பார்த்துக் காத்திருந்திட்டு, கோபமாகப் போயிருப்பாங்களோ? அட, கடவுளே!' என்று வேறு பயமும் சேர்ந்தது. அதன் விளைவாக, அவனது சிறிய உடம்பு பெரிதாக நடுங்கியது. ஆகவே, மிகுந்த கன்காணிப்புடன்

அவன் கூடத்தின் வெளியிலே கிடந்த முக்காலியில் வெள்ளித் தட்டை வைத்தான். 'அம்மா எங்கே?' என்ற வினாக் குறியுடன் அவன் மெள்ள எட்டிப் பார்த்தான். அம்மாவையும் காணவில்லை!...

பாபுவுக்கு மேலும் பயம் வளர ஆரம்பித்தது. நேற்று இரவு எஜமானரும் எஜமானியும் பயங்கரச் சோகத்துடன் என்னவோ காதும் காதும் வைத்த மாதிரி பேசிக்கொண்ட நிகழ்ச்சியை அவன் நினைவூட்டிக்கொண்டான். படுத்துக் கொள்ளப் போகுமுன், அவர்களிடம் சொல்லிக்கொண்டு போக வந்தவன், ஏனோ பயந்து, சொல்லிக்கொள்ளாமலே உறங்கச் சென்றுவிட்டானே!

''ராமு!... சீதா!''

பாபுவின் குரல் சன்னமாகவே ஒலித்தது.

அந்தக் குரல் அடங்கவில்லை.

அதற்குள் தொலைபேசி அலறத் தொடங்கிவிட்டது.

பாபுவுக்குத் தர்மசங்கடமாகிவிட்டது.

தொலைபேசியைத் தொடுவதற்கு அவனுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

எப்படி முடியும்?

அவன் வேலைக்காரப் பையன். எடுபிடி!

அம்மாவையும் காணோம்!

ராமனையோ சீதையையோ எழுப்பினால், வந்தது வினை!


பாவம், தொலைபேசி அலறிக்கொண்டே இருந்தது.

அம்மாவைக் கூப்பிடலாம். அதுதான் நல்லது. பின்புறம் போயிருக்கக்கூடும். ஆமாம், அதுதான் சரி.

அழைத்தான் பாபு.

நல்ல வேளை, இல்லத்தின் தலைவியான அபயாம்பாள் ஓடோடி வந்துவிட்டாள். தொலைபேசிக் குரலுக்கு மேலாக,

அவளுக்குக் காப்பிதான் தோன்றியிருக்க வேண்டும். ஒரு டபரா - தம்ளரை எடுத்துக்கொண்டாள். ஒரு கையில் ரிஸீவரும், மறு கையில் காப்பித் தம்ளருமாக, சுவையும் பதற்றமும் சூழ, அவள் 'ஹலோ!' என்றாள். "யார், சேட்ஜியா?... ஐயா அங்கே சௌகார்ப்பேட்டையண்டைதான் புறப்பட்டு வந்தாங்க... ஆமா, அவங்களேதான் வண்டியை எடுத்துகினு வந்தாங்க. ம்!... இந்தக் காலத்திலே வேலைக்காரங்களுக்குத் தான் நாம்ப பயப்பட வேண்டியிருக்கே!... ஐயாகிட்டே ஏதானும் தாக்கல் தகவல் சொல்லணுமா, சேட்?... என்ன,



அப்படியா?..." பேசிக்கொண்டு வந்த அபயாம்பாளின் வலக்கையிலிருந்த காப்பித் தம்ளர் ஒரு புறம் நழுவியது. இடக்கையிலிருந்த இணைப்புக்கருவி மறு பக்கம் நழுவியது. பேயறைபட்டவளென எஜமானி அம்மாள் நின்றுகொண்டிருந்தாள்.

பாபுவின் பிஞ்சு நெஞ்சம் படபடத்தது. தலையைக் கவிழ்ந்துகொள்வதும், தலையை உயர்த்திப் பார்ப்பதுமாகச் சில விநாடிகளைக் கழித்தான்; பிறகு, "அம்மா!... ஐயாவோட காப்பியை எடுத்துக்கிடுங்க!..." என்று பவ்யமாகக் கெஞ்சுதலுடன் வேண்டினான்.

அபயாம்பாள், சிறுவன் பாபுவை நிமிர்ந்து பார்த்தாள். மெல்லிய புன்னகை ஊடாடியது, அவளது உதடுகளிலே. நெற்றித் திலகம் மங்களம் பொலிய விளங்கிற்று. "பாபு, எனக்குக் காப்பி வேணாம். பசங்களுக்கு ஆளுக்கொன்னு குடுத்திட்டு, பாக்கியுள்ள செட்டை நீ எடுத்துக்க!" என்று பரிவுடன் தெரிவித்தாள்.

பாபுவின் மேனி புல்லரித்தது. கண் விழித்ததும், அவன் தன்னுடைய கிழிசல் நிஜார்ப் பையிலிருந்து எடுத்துப் படித்த அந்தப் பொன்மொழியை ஞாபகப்படுத்திக்கொண்டான்; **'அன்பு என்பது ஒரு போதுமே கேட்பது இல்லை. எப்போதுமே கொடுக்கவே செய்யும்!'** என்று மெய்ம்மறந்து படித்ததை முணுமுணுத்துக்கொண்டான். "பாபுஜி!... காந்தித் தாத்தா!..." உணர்ச்சி வசப்பட்டு அப்படியே நின்று விட்டான் ஏழைப்பிள்ளை பாபு!

அத்தியாயம் — 2

## நீடிக்காத பொய்

உதய சூரியன் 'சுளீ'ரென்று கண்ணைக் குத்திற்று!

அப்பொழுதுதான் பாபுவுக்கு நினைவு வந்தது. அண்ணாந்து பார்த்தான். பளீரென்று எரிந்தது குழல்விளக்கு. மாடிவீட்டுச் செல்வங்களின் காலடியில் மண்டியிட்டு உட்கார்ந்து, அவர்களை எழுப்ப முயன்று, தோற்றுப் போயிருந்த சிறுவன் எழுந்தான்; ஒரு குதி குதித்தான். விளக்கு அணைந்தது. சும்மா குதித்தவுடன் எப்படி விளக்கு அணைந்துவிட்டது என்று யோசிக்கிறீர்களா?—விளக்குப் பொத்தானை அழுத்தினான்; அணைந்தது விளக்கு. அவ்வளவுதான்!

பாபுவுக்கு இருந்தது சின்ன மூளைதான்! — பன்னிரண்டு வயதுப் பையனுக்குச் சின்ன மூளைதானே இருக்கும்?—அந்தச் சிறிய மூளையைக் கொண்டு, பிரமாதமாக ஆலோசனை பண்ணத் தொடங்கிவிட்டான் அவன். அந்நிலைக்கு உண்டான காரணம் இதுவேதான்:

'ராமனையும் சீதையையும் எப்படி எழுப்புவது? காப்பி எவ்வளவு நேரத்துக்குத்தான் ஆறாமல் இருக்கும்? அம்மாவும் கீழே போயிட்டாங்களே! அவங்க மனசு ஒரு நிலையிலே இல்லே போலே. இருந்திருந்தா, பிள்ளைங்களை எழுப்பிக் காப்பி சாப்பிடச் சொல்லாம போயிருப்பாங்களா? அலட்டி எழுப்புவாங்க; இல்லாட்டி, இங்கிலீஷ் பிளேட்டைப் போட்டு எழுப்புவாங்க. எனக்கு அம்மாதிரியான பாட்டு தெரியாது. அவங்களைத் தட்டி உசுப்பிவிடுறதுக்கு உத்தரவும் கிடையாது. நான் கேவலம் ஓர் ஏழை வேலைக்காரப் பயல்தானே!—அதிலேயும் ஓர் அநாதை எடுபிடியாச்சே நான்!...'

மூக்கின் நுனியில் விரலை வைத்துவிட்டால், யோசனை வருமென்று கேள்விப்பட்டிருந்தான் பாபு. ஆகவே, அவ்வாறே

செய்தான். ஆனால், யோசனை வருவது போல ஓர் உணர்வு பரவி வந்தது. எதிர்ப்புறத்தில் அவன் பார்வை ஓடியது.

'ஆ!' என்று பதறினான் பாபு.

ஆட்டுக்குட்டி ஒன்று தோட்டத்தில் மேய்ந்துகொண்டிருக்கிறது.

தோட்டக்காரக் கிழவர் 'பராக்கு' பார்த்துக்கொண்டிருக்கிறாரோ, என்னவோ? அந்த மனிதருக்குத் தம் பிள்ளையாண்டான் ஓடிப் போய்விட்ட கவலையோ, என்னவோ? சுத்த மோசம்! ஆமாம், பின்னே என்ன? கடமைக்குப் பின்னேதான் சொந்தக் கவலை எல்லாம் இருக்க வேண்டும்?

"தாத்தா!" என்று கூப்பாடு போட்டான் பாபு. தொண்டை கரகரத்தது.

நல்ல காலம், தோட்டக் காவல்காரக் கிழவர் துளசிங்கம் தூங்கவில்லை; கடமையில் கருத்தாகத்தான் இருந்தார்; 'டிரீயோ!' போட்டு, ஆட்டுக்குட்டியை ஒரே விரட்டாக விரட்டி விட்டார்.

பாபுவுக்கு நல்ல மூச்சு வந்தது.

முதலாளிக்குத் தோட்டம் என்றால், ஒரு நாட்டம். மேலும், அவரது உடைமைகளில் ஒரு பிசிறு சேதமானாலும் கூட, அவர் பொறுக்க மாட்டார். இயல்பாகவே, அவர் முன் கோபக்காரர். அப்பால், கேட்கவும் வேண்டுமா?

தோட்டமும் பிழைத்தது.

ஆட்டுக்குட்டியும் பிழைத்தது.

துளசிங்கமும் பிழைத்துவிட்டார்.

திரும்பினான் பாபு; காப்பித் தம்ளரை மெல்லத் தொட்டுப் பார்த்தான். வீட்டுத் தலைவி அவனுக்காக அனுமதித்திருந்த காப்பியின் ஞாபகம் வந்தது. 'குழந்தைகள்' இன்னமும் நித்திரை கலையவில்லை. காப்பியின் கைச்சூடு இன்னும் இரண்டொரு விநாடிகளுக்குத் தாங்கும்! மறுமுறையும் அவன்

மூக்கின் முனையில் விரலைப் பதித்தான். யோசனையை வரவழைக்க வேண்டாவா?

ஒரு பாட்டுப்பாடி, ராமனையும் சீதையையும் எழுப்பினால் என்ன? — 'பேஷ், அதுதான் சரி!' அடிக்கொரு தரம் அவன் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்த 'நலந்தானா?' என்னும் திரைப்பாடலை அவன் நினைத்துக்கொண்டான். நேற்று தினம் பொங்கலை ஒட்டிப் பங்களாவே திரண்டுபோய்ப் பார்த்தது, 'தில்லானா'வை. அவ்ன் மாத்திரந்தான் பங்களாவுக்குக் காவல். அவனுக்குக் காவல் 'கூர்க்கா'. அவனுக்குக் காவல் ஓர் இராஜபாளையம்'!—ப்பயர், 'ஸ்டுடி'!—முதலாளியிடமிருந்த 'ஸ்டுடிபேகர்' காருக்கு ஒரு ஞாபக அடையாளம் போலிருக்கிறது. அவன் தில்லானாவை நாளை கழித்துப் பார்த்துவிடுவான். 'துட்டு' கொடுப்பதாக அம்மா உறுதி மொழிந்திருக்கிறார்கள். அரிச்சந்திரன் வாக்கு. தவறாது!

பாபுவுக்குக் காப்பி ஒரு சோதனையாகப் போய்விட்டது. அதைக்காட்டிலும், ராமன், சீதையின் 'கும்பகர்ண — கும்பகர்ணி' (மன்னிக்கவும்) தூக்கம் பெருஞ்சோதிப்பு ஆகிவிட்டது. என்னவோ ஒரு துணிச்சலுடன் வாயைத் திறந்து பாடிவிட்டான். காப்பியின் நினைவு அவனை அப்படிச் செய்துவிட்டிருக்கக்கூடும்.

அவ்வளவுதான்!

ராமனும் சீதையும் வாரிச் சுருட்டிக்கொண்டு ஓடி வந்து சந்தித்துக்கொண்டார்கள். ஒரே மாதிரியான உதட்டுச் சுழிப்பு இருவர் முகங்களிலும் தென்பட்டது. பிறகு, இருவரும் காப்பியைத் தரிசித்தார்கள். ''எண்டா பாபு! ஒன்னை பாட்டுப் படிக்கவா எங்க அப்பா வேலைக்கு வச்சுக்கிணாங்க?... அதுக்கெல்லாம் எங்க பங்களாவிலே டிரான்ஸிஸ்டர் இல்லே, ரேடியோ இல்லே, ரேடியோகிராம் இல்லே!...போடா, இடியட்!' என்று ஒரு போடு போட்டுவிட்டு, ராமன் காப்பித் தம்ளரை எடுக்க, அதையொட்டிச் சீதையும் காப்பியைப் பருகினாள்.

மிச்சம் ஒரு காப்பி இருந்தது.

பாபுவுக்குத் தன் எஜமானி அம்மாள் தன்னிடம் மீத முள்ள அந்த ஒரு காப்பியை எடுத்துக்கொள்ளும்படி கூறியது நெஞ்சிலேயே நின்றது. நாக்கு ஊறியது. மெதுவாக வெள்ளித்தட்டை ஒட்டி உட்கார்ந்துகொண்டான் அவன். ஏன்னவோ பயம் வேறு உள்ளுக்குள் அரித்துக்கொண் டிருந்தது. தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, அந்தக் குவளையை எட்டி எடுக்கப் போனான்.

அதற்குள், 'ராமா!' என்று சீதையும், 'சீதா!' என்று ராமனும் குரல் கொடுத்துக்கொண்டே, கைகளை நீட்டி, அந்தக் காப்பித் தம்ளரை இருவரும் பற்றிக்கொண்டார்கள். "அப்பாவோட ஸ்பெஷல் காப்பி கேவலம், வேலைக்காரப் பய லான உனக்கா வேணும்?... சீ!..." என்று துடுக்காகச் சத்தம் போட்டுக்கொண்டே பாபுவின் கைகளை அப்பால் தள்ளி விட்டான் ராமன்.

ராமன் எப்போதுமே படுசுட்டி!

சீதை பெண்பிறவி அல்லவா? பெண் இனத்துக்கே உரிய இரக்க குணம் கொண்டவள்; தாய்க்குலம் ஆயிற்றே! கருணையோடு பாபுவை நிமிர்ந்து பார்த்தாள்.

ராமனும் சீதையும் இரட்டைப்பிள்ளைகள்; இராமேசுவரத் தலயாத்திரை அருளிய செல்வக் குழந்தைகள். என்றாலும், ராமன் 'சிடுமூஞ்சி'. சீதை அப்படி அல்ல. அதனால்தான், இரக்கச் சித்தத்துடன் பாபுவை நிமிர்ந்து பார்த்துவிட்டு, அப்புறம், ராமனை—தன் அண்ணனை— ஏறிட்டு நோக்கினாள், தங்கை சீதை.

பாபுவுக்கு வேர்த்துக் கொட்டியது. ராமனின் செயலைக் கண்டதும், உடனே கெட்டிக்காரத்தனமாகத் தன்னுடைய கைகளை நகர்த்திக்கொள்ள இயலாமல் போய்விட்டதே யென்று வருந்தினான். பிஞ்சு நெஞ்சம் வெகுவாகக் குழம் பியது. 'இந்தக் காப்பியை எடுத்துக்கும்படி, அம்மா சொன்னாங்க!' என்று கூற வேண்டும் போல அந்த இளமனத் தின் ஒருபுறம் ஒரு நினைவு தூண்டியது; மறு விநாடி, அவ்

வெண்ணத்தை மாற்றியது, மனத்தின் மறு பகுதி. 'உன் கிட்டே எடுத்துத் தாரதுக்காகத்தான் காப்பித் தம்ளரை எடுக்க முனைஞ்சேன். நான் கேவலம் அநாதை வேலைக்காரப்பயல்! என்னாலே நீங்களெல்லாம் குடிக்கிற காப்பிக்குக் கனவு காண முடியுமா?' என்று பொய் சொல்லித் தப்பிக்கவும் மனத்தில் ஓடியது. உடனே, 'பொய் சொல்லும் வாய்க்குப் போசனம் கிட்டாது!' என்று யாரோ சொல்லக் கேட்ட விவரம் அந்தப் பொய்யை நசுக்கிவிட்டது. மௌனமாக இருந்தான்; மனத்தை ஒருநிலைப்படுத்திக்கொண்டான்; மெள்ளத் தலையை உயர்த்தினான். சிவந்த முகம் கறுத்திருந்தது.

''இது ஒனக்கு, இது எனக்கு!'' என்று சொல்லிக் கொண்டே, தம்ளரில் ஒரு பாதியை ஊற்றி அவன் குடித்தான். மறு பகுதி கொண்ட டபராவைத் தன் தங்கையிடம் கொடுத்தான் ராமன்.

சீதை கையிலேந்திய உபரிக் காப்பியைக் குடிக்க மனமில்லாமல், பாபுவைப் பார்த்தாள்; 'நீ குடி!' என்பது மாதிரி பாபுவை நோக்கிக் கண் குறிப்பைக்கொண்டு கேட்டுக் கொண்டாள்,

பாபுவும் கண் குறிப்பினால் 'ஊஹூம்' என்று தெரிவித்து விட்டான்.

இக்காட்சியின் பாசத்தைக் கவனிக்கவில்லை, ராமன். பைஜாமாவும், முழுக்கை 'உலன்' பனியனும் திகழ, புத்தகப் பெட்டியை எற்றிக்கொண்டே, ரேடியோவைத் திருகலானான்.

சீதையின் கையில் இப்போது காலித் தம்ளர் இருந்தது!

ரேடியோ அவன் விரும்பிய விதமே 'ஜாஸ்' சங்கீதத்தைப் பொழிந்திருக்கக்கூடாதா? அந்தப் பதின்மூன்று வயதுக் 'குழந்தைக்கு'க் கெட்ட கோபம் மூண்டது. கோபம் கெட்டது தானே? ரேடியோவை 'அமர்த்திவிட்டு' 'அப்பாகிட்டே சொல்லி, என்னோட ஃபிரன்ட் நிர்மல் வச்சிருக்கிற மாதிரி ஒரு மலேயா ரேடியோ வாங்கிக்கணும். அப்பாவுக்குப் பல ஜோலி. மறந்திடுவாங்க. இன்னைக்கு நினைப்பூட்ட வேணும்' என்று முடிவு

செய்தபடி, மீண்டும் அவனுடைய அழகான சிறிய பட்டு மெத்தையில் சரணடைந்தான்.

சீதை முகத்தைக் கழுவிக்கொண்டு புத்தகப்பெட்டியைத் திறந்தாள்.

*　　　*　　　*

டபரா தம்ளர்களை ஒழுங்குபடுத்தி, வெள்ளித்தட்டில் வைத்துக்கொண்டு மெதுவாக எழுந்தான் பாபு. காப்பியின் நினைவை மறந்துவிட முயற்சி செய்தது அவன் மனம். கீழ்த் தளத்துக்குப் புறப்பட்டவன், டக்கென்று நின்றான். அவனது குழம்பிய உள்ளம், சீதை படித்துக்கொண்டிருந்த வாசகத்தைக் கேட்டதும், ஒரு கணம் அமைதியடைந்தது.

அந்த வாசகம்: **"பொய்யை அடித்தளமாகக் கொண்ட எதுவும் நீடித்து நிற்க முடியாது!"**

அவ்வாசகத்தை மனத்தில் வாங்கிப் புரிந்துகொள்ளத் துளி கூடச் சிரமப்படவில்லை ஏழைப்பையன்.

"ஸிஸ்டர்!" என்று கூப்பிட்டான் பாபு.

"என்ன, பாபு?" என்று கேட்டாள் சீதை.

"இப்போ நீ படிச்ச வாசகம் யார் சொன்னது?"

"மகாத்மா காந்தி!"

"ஓ!... காந்திஜியா?"

"இல்லேப்பா!... காந்தி!"

பாபு விநயமாகப் புன்னகை காட்டினான். "காந்தியும் காந்திஜியும் ஒண்ணுதான். 'ஜி' என்கிறது மரியாதைக்கோசரம் சேர்த்துக்கிடுறதாம். பெரியவங்க பேசிக்கிட்டாங்க. நீ உன் டீச்சரை வேணும்னாலும் கேளேன்!" படித்த படிப்பு துணை நின்றது.

"ஓ, அப்படியா? எங்க டீச்சர் சொல்லிக் குடுக்கலையே!"

"கேட்டாச் சொல்லிக் கொடுப்பாங்க போல!"

"ஆல்ரைட்! கேட்கிறேன்!"

"ம்!"

"காந்திஜி கடவுளோ?"

"அப்படித்தான் பேசிக்கிடுறாங்க, சீதை!"

ராமன் இப்படியா குறட்டை விடுவான்?

பாபுவுக்குத் தான் பொய் சொல்லாமல் தப்பித்ததை எண்ணிய போது, மனம் நிறைந்தது. கால்சட்டைப்பையில் இருந்த கரும்புத்துண்டு ஞாபகம் வந்தது. எச்சில் ஊறத் தொடங்கியது. அவன் மாடிப்படிகளைக் கடந்தான்.

வழியில், அபயாம்பாள் அம்மாள் எதிர்ப்பட்டாள்; "பசங்க காப்பி சாப்பிட்டுப்பிட்டாங்களா?" என்று வினவினாள்.

பாபு, அம்மாளைப் பக்தியுடன் பார்த்தான்.

அம்மாளின் முகத்திலே ஒரு புதுமையான— புதிய சோகம் இழைகிறதே!— ஏன்?...

"ஆமாங்கம்மா!" என்று மரியாதையுடன் பதில் சொன்னான் பாபு.

"நீ காப்பி குடிச்சியா?"

"ம்!" என்று தலையை ஆட்டிவிட்டு நின்றான் சிறுவன். அடுத்த விநாடிதான் அவனுக்குச் சுய நினைவு வந்தது. உண்மையைச் சொல்லிவிடத் துடித்தான்!

அதுவரை, அபயாம்பாள் அம்மாள் அங்கு நின்றால் தானே?

பாபுவுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது!

## உலகமும் ஆண்டவனும்!

புழுக்கடையை அடைந்ததுந்தான் சமையற்கூடத் தலைவரான காசியைக் கண்டான் பாபு.

பாவம், இரண்டு நிமிடங்களுக்கு அவன் என்ன பாடுபட்டு விட்டான்!— எங்கெங்கெல்லாம் தேடிவிட்டான்!

யாரை?— தெரியுமல்லவா?

காசியைத்தான்!

ஏன், தெரியுமோ?

பாபுவுக்குச் சேர வேண்டிய மாமூலான காப்பியைப் பெறுவதற்காக வேண்டித்தான்!

உரிமைப் பிரச்சினைதான்!

தேவை!— அவனுக்குத் தேவை. ஒரு குவளைக் காப்பி! "அண்ணே! காசி அண்ணே!" என்று பாபு கூவினான்.

ஆனால், அச்சிறுவனின் குரலை அமுத்திவிட்டு, அப்பொழுது அங்கே பெரியவர் காசியின் குரல் மேலோங்கிக் கேட்டது, "ஆமா, நம்ப மாதிரி ஏழைபாழைங்களுக்குத்தான் விழுந்துகிட்டு இருக்குதாம். பேப்பரிலே போட்டிருக்காம்!" என்றார் அவர்.

"அப்படீங்களா?" என்றாள் காவேரி.

"ஆத்தாடி!" என்றார் துளசிங்கம்.

"ஊம்!" கொட்டினார் காசி.

பாபுவுக்கு ஒன்றும் விளங்கக்காணோம். 'தமிழ் அன்னை' பங்களாவில் வேலை பார்க்கும் அத்தொழிலாளர்களை வெறித்துப்பார்த்தான் அவன்; தன்னுடைய காப்பிப் பிரச்சினையைமறந்துவிடாமல், அவர்கள் பேசிய பேச்சின்விவரத்தை அறிந்துகொள்ள ஆசைப்பட்டான். "ஆமா. என்னென்னமோ பேசிக்கிட்டு இருக்கீங்களே, விஷயம் என்னவாம்? இந்தப்

பொடியன் அறியலாமோ?'' என்று சிரிப்பை அடக்கியவனாகக் கேட்டுவிட்டு, கள்ளிப்பெட்டியின்மீதிருந்த பொடி டப்பாவைக் காசியிடம் சமர்ப்பித்துவிட்டு நின்றான் பாபு.

காசிக்குப் பொடியைக் கண்டால் ஒரு மயக்கம். பலரும் என்னதான் பயங்காட்டியும் பலனில்லை. இப்போது அதே பொடிதான் 'துருப்பாக' உபயோகமாகிவிட்டது.

''பாபு, விஷயம் ஒன்றும் பெரிசில்லே. நாம்ப வேலைக் காரங்க. நாம் எல்லாருமாச் சேர்ந்து ஒரு லாட்டரிச் சீட்டு வாங்கினால் தேவலாம் அப்படின்னு ஒரு யோசனை பண்ணி யிருக்கே ாம்!...'' என்று விளக்கம் கொடுத்தார் காசி.



''பேஷான யோசனைதானுங்க, அண்ணாச்சி. பரிசுச் சீட்டை வாங்குறதினாலே, நம்ப அரசாங்கத்துக்கும் நம்ம நாட்டுக்கும் நாம் நம்மோட கடமையைச் செய்ததாக அர்த்த மாம்!—நேத்தைக்கு மண்ணடி கடைத்தெருப்பக்கம் பேசிக் கிட்டாங்க.''

''அப்படியா? அப்படின்னா, வாங்கிப்புட வேண்டியது தான். நீ என்னா சொல்றே?''

''நீங்க பெரியவங்க முடிவு செஞ்சால் சரிதான். நான் என்னத்தைக் கண்டேன்?''

''நீ ஒண்ணையும் காண வேண்டாம். உன் சவுக்குண்டான துட்டை நீ கொடுத்திட்டால் சரிதான்!''

"துட்டா? அதை நான் எங்கே கண்டேன்?" என்று பரிதாபமாகச் சொன்னான் பாபு; "துட்டுக்கு—காசு பணத்துக்கு—நான் எங்கே போவேன்?" என்றும் தொடர்ந்தான்.

"பாவம்!... உன் வீதத்துக்கு நாங்க வேணும்னா போட்டுக்கிறோம். பணம் விழுந்தாக்க மோசம் பண்ணாம, உண்டான ஈவையும் குடுத்துப்பிடுறோம்!" என்று பேசினார் காசி.

"ஆமாம்ப்பா!" என்று ஆமோதித்தாள் காவேரி; பிள்ளை குட்டிக்காரி ; பாசத்துடன் பேசினாள், கணவன் படுத்த படுக்கை, ஆசை இருப்பது இயல்புதான்.

விரக்தி சூழப் பாபு சிரித்தான். பல்வரிசை அழகாக விளங்கிற்று.

"எனக்கு நித்த நித்தம் ஆண்டவன் படி அளந்தாலே போதும். நான் அநாதை. எனக்கு எதுக்குப் பணம்?" என்று சொல்லிவிட்டு, பிறகு, "நான் சின்னப்பிள்ளை ! நீங்க கூட்டுச் சேர்ந்து சீட்டு வாங்குங்க. பகவான் கண் திறந்தாலும் திறப்பான்!" என்றும் தொடர்ந்தான் சிறுவன்.

"நல்ல பிள்ளை நம்ப பாபு!" என்று பாராட்டினார் துளசிங்கம்.

"ஆமா, ஆமா!... ம்... இந்த வருசம் பொங்கல் இனாம் கூடத் தரல்லே நம்ப முதலாளி. அதைக் குடுத்திருந்தாலும், நம்பளோட கைச்செலவுக்கு உபயோகப்பட்டிருக்கும்!" என்றார் காசி. மெல்லிய குரலில் சொன்னார்; எஜமானி அம்மாள் வருகிறாளா என்று திரும்பிப் பார்த்தபடி பேசினார். உலகம் புரிந்தவர், பாருங்கள்!

"எப்பவும் வருஷாவருஷம் பொங்கல் இனாம் தருவாங்களோ?" என்று கேட்டான் பாபு.

"ஓ!"

"அப்படின்னா, ஏன் இப்ப கொடுக்கலை?" என்று திரும்பவும் கேட்டான் பாபு. விவேகம் பொதிந்த வினா!

"உஸ்... அம்மா வந்தாலும் வருவாங்க. அப்பாலே சாவகாசமாகச் சொல்லுறேன்," என்று அந்தப் பேச்சை அத்தோடு அடைத்துவிட்டார் சமையற்காரர்.

பாபு, தலை உருட்டும் பொம்மையைப் போன்று, தலையை ஆட்டிவிட்டு அடங்கினான். எனினும், காசி சொல்லாமல் விட்டுவிட்ட அல்லது சொல்லப் பயந்துவிட்ட விஷயம் அவனுக்கு ஒரு பெரிய இரகசியம் மாதிரி தோன்றியது. சாவகாசமாகச் சொல்வதாகத் தெரிவித்துங்கூட, அவனால் அமைதியோடு இருக்க முடியவில்லை. 'நமக்கு ஏன் மேலிடத்து விவகாரத்தைப்பற்றி வீண் கவலை?' என்று சின்னப்பிள்ளை 'கம்'மென்று இருக்கக் கூடாதோ? இருக்க வேண்டாவா? சற்று நேரம் கழித்துத் தான், அவனுக்கு அப்படிப்பட்ட உண்மை புரியத் தொடங்கியது.

அபயாம்பாளின் தலை தெரிந்தது.

உடனே, அவரவர்களின் கடமை அவரவர்களை அழைத்தது.

"காவேரி, மல்லித்தூளைச் சலிச்சுவை. சீக்கிரம்," என்று உத்தரவு கொடுத்தார் காசி; "பாபு, பச்சைக் கொத்தமல்லித் தளை ஒரு ஐம்பது காசுக்கு வாங்கிக்கினு வா. அம்மா காசு தருவாங்க," என்று பாபுவுக்கும் வேலை கொடுத்தார்.

பாபுவுக்கு முகம் சுருங்கியது.

வயிறு சுருங்கியதால் ஏற்பட்ட விளைவாக இருக்கக்கூடும்.

பாபு பேசாமல் காசியைத் தொடர்ந்தான்; சமையற் கட்டை அடைந்ததும், "அண்ணே, அடியேனுக்கு உண்டான மாமூல் காப்பியை ஊத்தறீங்களா?" என்று பதமான தோரணையில் விசாரித்தான்.

பெரியவர் சிறிய பிள்ளையை ஒத்துத் திருதிருவென்று விழித்தார். "பாபு, சுத்தமா மறந்துபோச்சு. நீ மாடிக்குப் போனவன் ரொம்ப நேரமா வராததாலே, நினைப்பே இல்லாம உன்னோட காப்பியையும் நானே குடிச்சுப்பிட்டேம்பா!..." என்றார் அடித்தொண்டையில்.

பாபுவுக்கு எரிச்சல் மூண்டது. "என்ன அண்ணே, இப்படிச் சொல்றீங்க?... உங்களுக்குக் கண்டது போகத்தானே மற்றவங்களுக்கு? அப்படியிருக்கிறப்போ, நீங்க இந்த வாண்டுப் பயலோட காப்பியையும் சேர்த்துக் குடிச்சுவச்சிட்ட தாகச் சொல்றதுக்கே உங்களுக்கு மனசுதானே வந்திருக்குது!..." என்று கனத்த குரலில் செப்பினான் பாபு.

காசி அவனைக் கோபத்துடன் விழித்துப் பார்க்கலானார். "டே, பாபு! வாய் ரொம்பத் தூரம் நீளுது ஒனக்கு. நீ பாடம் படிச்சுக் கொடுக்கிறீயா எனக்கு? அதெல்லாம் எனக்குத் தெரியும். நில்லு, இதோ ஒரு நிமிஷத்திலே உனக்குக் காப்பி போட்டுத் தந்திடுறேன்!" என்றார்.

பாபு கோபம் அடைந்தான். "போதுங்க அண்ணே உங்க பிரியம். நீங்க தப்புச் செஞ்சதாலேதான், அதைச் சுட்டிக் காட்டினேன். எனக்குக் காப்பியும் வேணாம், ஒரு மண்ணாங் கட்டியும் வேண்டியதில்லே. எனக்குண்டான ஒரு குவளை நீராகாரத்தை நான் குடிச்சுக்கிடுறேன். நீங்க உங்க வேலையைப் பாருங்க," என்றான்.

"நீ பெரிய ஆளுதான்!" என்றார் காசி.

"நான் பெரிய ஆளு இல்லீங்க. பன்னெண்டு வயசுப் பயல் நான். உங்களைச் சொல்லுங்க. நீங்க பெரிய ஆளு!" என்று 'பொடி' வைத்து மடக்கினான் சிறுவன்.

"சரி, அந்த மட்டுக்கு உன் பேச்சை நிறுத்து. ஓடிப் போய், மல்லித்தழை வாங்கிக்கினு வா, ஐயாவுக்கு மல்லித் தழை இல்லாட்டி, குழம்புக் கறி பிடிக்காது."

"என்னோட கடமையைச் சரிவரச் செய்ய எப்பவுமே சித்தமாய் இருப்பேனுங்க. அந்த அளவுக்கு என் மனசு பழகிப் போயிருக்குதுங்க!"

காசி அவன் பேச்சை வாங்கிக்கொள்ளாமலே, பொடியை நாசிக்குள் வாங்கிக்கொள்ளத் தலைப்பட்டார்.

* * *

ஐம்பது காசு பாபுவின் உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கியது. "பத்திரமாய்ப் போயிட்டுவா, பாபு" என்று பெற்ற

அன்னையெனப் புத்தி சொல்லி அனுப்பிய தன்னுடைய முதலாளியின் மனைவியின் அன்பை அவன் மறந்துவிடாமல், முத்துமாரி செட்டித்தெருவின் அமைதியைக் கடந்தான்.

மண்ணடி கடைத்தெரு.

அப்பப்பா! என்ன நெரிசல்!

பொங்கல் சந்தடி இன்னுமா அடங்காது?

பாபு கண்களை விழிப்பூட்டிக்கொண்டு நடந்துகொண்டிருந்தான். வழியில் காப்பி ஹோட்டல் குறுக்கிட்டது. ஓரக் கண்ணால் பார்வையிட்டான். ஓரத்தில் சிலர் அமர்ந்து காப்பி குடித்துக்கொண்டிருந்தார்கள். உடனே அவனுக்குக் காப்பி நினைவு மீண்டது. 'கடவுளே! இன்னிக்கு நல்ல பொழுதாத் தான் விடிஞ்சிருக்குது. அம்மா எனக்கு அனுமதிச்ச அந்த ஸ்பெஷல் காப்பியும் கிடைக்கல்லே. வழக்கமா காசி கொடுக்க வேண்டிய சாதா காப்பியும் ஒட்டலே!...' என்று எண்ணமிட்டான்; தனக்குத்தானே வருந்தவும் செய்தான். காலையிலே பாபுவுக்கும் ஒரு காப்பி கொடுக்கும் படி ஆணை இட்டிருந்தார்கள் முதலாளியும் அவர் சம்சாரமும்! காசி இப்படி ஏமாற்றிவிட்டாரே! இந்த நடப்பை முதலாளி யிடமாவது, அவரது மனைவியிடத்திலாவது சொல்லிவிட வேண்டும். அப்போதுதான், திரும்பவும் இம்மாதிரித் தவறு ஏற்படாமல் இருக்கும். காசி அண்ணனையும் கண்டிப்பார்கள். பாபுவுக்கும் சீராகவும் ஒழுங்காகவும் காப்பி கிடைக்கும். இங்கே வேலைக்கு வந்ததிலிருந்து இந்த அறுபது, அறுபத்தைந்து நாள்களிலே காசி அவனை இப்படி ஏய்த்தது இல்லை!

கார்ச்சத்தம் ஒன்று கேட்டது.

பாபு விசையுடன் திரும்பினான். பயம் மூண்டது. முதலாளியின் காரோ என்று எதிர்பார்த்தான். இல்லை. வேறு யாருடைய வண்டியோ, தெரியவில்லை. தான் எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கையை மனத்தில் திடப்படுத்திக் கொண்டு, மார்க்கெட்டைக் குறி வைத்து வேகமாக நடந்தான் சிறுவன்.

வழியில் அங்கங்கே கும்பல் கும்பலாக ஜனங்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

பாபு விவரம் அறிந்தான்.

தமிழக அரசின் பரிசுச் சீட்டுகளுக்காகத்தான் இத்தனை நெரிசல்!

முடிவு தேதிக்கு இன்னும் நாலைந்து தினங்களே பாக்கி இருக்கின்றன.

காசியும் அவரைச் சார்ந்த தொழிலாளர் குழாமும் கூடிப் பேசிய பேச்சின் நிலவரத்தையும் பாபு மறந்துவிடவில்லை. அதே தருணத்தில், காசி தனக்குக் காப்பி கொடுக்கத் தவறியதையும், அதன் நிமித்தம் தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடிவு செய்ததையும் அவன் மறந்துவிட மாட்டான்!...

மார்க்கெட் வாசலில் ஏதோ சண்டை.

டீ கடை முதலாளி அவரது சிப்பந்தியை அறைந்து விட்டாராம். காரணம், அவரை அவரது வேலையாள் திட்டியிருக்கிறான்! அதனால் அந்த வேலையாளை வேலையைவிட்டு நீக்கியும் விட்டிருக்கிறார் கடையின் உரிமையாளர். யாரோ ஒருவர் அவரிடம் அந்த வேலைக்காரனை மன்னித்து மறுபடியும் அவனை வேலைக்குச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டிக் கொண்டிருந்தார். கடைக்காரர் மசியவில்லை. இன்னொருவர் குறுக்கிட்டார். "ஐயா!... மன்னிச்சிடுங்க அந்த ஆளை. மன்னிக்கிறது என்கிறது மனுஷனோட உயர்ந்த பண்பு - அப்படின்னு காந்தி மகாத்மாவே சொல்லியிருக்காரே!" என்று பேசினார்.

அந்தப் புதிய மனிதரின் பேச்சைக் கேட்டதும், டீ கடையின் சொந்தக்காரர் சற்றே சிந்தனை வசப்பட்டார். "சரி, போய் வேலையைப் பாருடா. நாயர், சாயபு, ஜோசப் இவங்களுக்குப் படிஞ்சு நட; சாமான் சட்டுகளை விரயப்படுத்தாதே!" என்றார்.

இந்நிகழ்ச்சி பாபுவின் பிஞ்சு உள்ளத்திலே தீவிரமாக வேலை செய்யத் தொடங்கியிருக்க வேண்டும். மார்க்கெட்டின் உள்ளே நடந்தான். கொத்தமல்லித்தழைக் கடை காணப்

பட்டது. உள்ளங்கையைத் திறந்தால், ஐம்பது காசைக் காணோம்! திகீரென்றது. பதற்றத்துடன் காலடியில் பார்த்தான். ஐம்பது காசு காணப்பட்டது. குனிந்து எடுத்தான். "டோய், யாரோட காசுடா அது? திருடுறியாடா?" என்று கிழம் ஒன்று இரைச்சல் போட்டது. பாபு சினம் அடைந்தான். "என் காசு ஐயா இது. எங்க எஜமானி அம்மா மல்லித்தளைக்காகத் தந்ததாக்கும். தவறி விழுந்திடுச்சு. எடுக்கிறேனாக்கும். எங்கக் காசை எடுக்காம, விட்டுடச் சொல்றீயாய்யா?" என்று பதிலுக்கு இரைச்சல் போட்டான். கிழவர் ஒடுங்கிப் போய்விட்டார். மல்லித்தழைக் கட்டுடன் பாபு பங்களாவை இலக்காக்கி விரைவுடன் நடந்தான். 'மன்னிக்கிறது ரொம்ப உயர்ந்ததாம். மன்னிக்கிறதின்னா, நமக்கு ஒருவர் ஒரு கெடுதியைச் செஞ்சாக்க, நாம அதை நினைச்சு அவருக்கு ஒரு பதில் கெடுதியைச் செய்யாமல், அவரை மன்னிக்கிற சுபாவந்தான் ரொம்பவும் ஒசத்தியாம்!... பெருக்கிப்பார்த்தா, இதுதான் அர்த்தம். காந்தி மகாத்மான்னா, காந்தி மகாத்மாவேதான்! நடந்து காட்டினவர்; வழிகாட்டுகிறார். நான் சின்னவன். என்னமோ, என் மூளையைக் கொண்டு புரிஞ்சுக்கப் பாடுபடுறேன்!...' என்று தன்னுள்ளே சிந்தித்துக்கொண்டே நடந்தான். அவனது இளைய உள்ளத்திலே காசி விசுவ ரூபம் எடுத்திருந்தார்!

முத்துமாரி செட்டித்தெரு முனையில் மடங்கிய வேளையிலே பாபு ஓர் அதிசயக் காட்சியைத் தரிசித்தான்!

பாபுவின் முதலாளி திருவாளர் ஆனந்தரங்கம் அவர்கள் விரைவுடன் நடந்து போய்க்கொண்டிருந்தார்!

'பெரிய வண்டியிலே வெளியிலே புறப்பட்ட ஐயா, ஏன் இப்போ நடந்து போய்க்கிட்டு இருக்காங்க?'

பாபுவுக்குத் தலைவலி வந்துவிட்டது. அவன் சற்றே பின் தங்கிவிடவும் துணிந்தான்!

'உலகம் ஆண்டவனின் திருவிளையாடல் கூடம்!'

காந்தித் தெய்வத்தின் வாக்கன்றோ இது!

## தியாகம்

'அடடே, மறந்தே போச்சே!' என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டே, பாபு தன்னுடைய கிழிசல் கால்சட்டைப் பையிலிருந்த அந்த ஒரு கரும்புத்துணுக்கை வெளியில் எடுத்தான். 'தமிழ் அன்னை' பங்களாவின் தலைவி கொடுத்த பொங்கல் அன்பளிப்பு அது. அவனுக்குக் கிடைத்த பங்கு இரண்டு கணுக்கள். அவற்றில் இந்தச் சிறிய துண்டுதான் மிச்சம். அதை ஊதிவிட்டு, வாயில் போட்டுச் சுவைத்தான். ஏற்கெனவே ஊறியிருந்த எச்சிலுடன் கரும்புச்சாறும் சேர்ந்தது. நாக்கில் பரவியிருந்த இனிப்பு அவனது உடம்பு முழுவதிலும் பரவியது போன்று எண்ணிக்கொண்டான். ஒதுக்கமாக வைக்கப்பட்டிருந்த சிமெண்டுத்தொட்டியில் சக்கையைத் துப்பினான்; திரும்பினான்.

அப்போது, காசியின் தலை தெரிந்தது. 'காசி அண்ணன் எனக்குக் காப்பி தராமலிருந்ததைப்பத்தி அம்மா கையிலே சொல்லாமல் விட்டது எவ்வளவோ நல்லதாய்ப் போச்சு. நான் புகார் சொல்லியிருந்தால், பாவம், காசி அண்ணன்பேரிலே அம்மாவுக்குத் தப்பான அபிப்பிராயம் விழுந்திருக்கும். அம்மா உடனுக்குடன் எதையும் விசாரித்து முடிவு சொல்லுறவங்க; ஐயா மாதிரி இல்லை!... நான் போன வருஷம் மயிலாப்பூரிலே அலுவல் செஞ்ச வீட்டுக்கார அம்மா மாதிரிதான் இந்த எசமானியும் தங்கம். 'மன்னிக்கிறது ரொம்ப ரொம்ப உயர்ந்தது!' அப்படின்னு பாபுஜி-மகாத்மா... சொல்லியிருக்காங்க. நான் காசி அண்ணனை மன்னிச்சிட்டேன். மன்னிக்கிறது எவ்வளவு சுலபமாகப் போயிட்டுது என் வரைக்கும்! ஆனா, காந்தி மகாத்மா இதைப்பத்தி ஒரு பேச்சு சொல்லியிருக்கிறதனாலே, உலகத்திலே மன்னிக்கிற புத்தியானது குறைச்சல் போலத்தான் என்னோடப் புத்திக்குத் தோணுது. மகாத்மா

பொன்மொழிகளைப் படிச்சுக் கொடுத்த பரமசிவ வாத்தியார் கிட்டே எதுக்கும் சந்தேகம் கேட்டுக்கிடணும்!...' இவ்வாறு எண்ணமிடலானான்.

காசி அலட்டி அழைக்கும் குரல் ஓடி வந்தது,

பாபு தன்னுடைய இருப்பிடத்தைக் கடந்து காசி நின்ற திசையை நாடி ஓடினான். பின்கட்டுக்கு உரிய சுருக்கு வழி அவனுக்கு வழிவிட்டது.

''பாபு!''

''அண்ணே!''

''உள்ளே வா, உனக்காகக் காப்பி கலந்து வச்சிருக்கேன். பலகாரம் சாப்பிடவும் ஆளைக் காணோமேன்னு தான் நானே உன்னைத் தேடிக்கினு வந்தேன். வா, சீக்கிரமாய்!'' என்றார் காசி. தந்தையின் ஸ்தானத்தில் இருந்து பேசுவதாகவே நினைத்து, அவர் உணர்ந்து பேசினார்.

''அண்ணே!''

பாபுவுக்குக் கண்கள் நிரம்பின. தந்தையின் நிலையிலிருந்து அவர் பேசியதாகவே அவனுக்கும் தோன்றியது. நடையிலிருந்த பூஞ்சிட்டுக் கடிகாரம் பத்து முறை நாகரிகமாகக் குரல் கொடுத்ததையும் அவன் கேட்கத் தவறவில்லை. அவனுக்கென்று ஏற்படுத்தப்பட்ட காலை நேரத்தின் அலுவல்களை எவ்வளவு கனகச்சிதமாக நிறைவேற்றிவிட்டான்; ராமனையும் சீதையையும் நீராடச் செய்தான் ; புதிய உடுப்புகளை அவரவர் அறைகளில் கொண்டுபோய் வைத்தான். அவர்களுக்குக் காலைபலகாரமும் காப்பியும் கொடுத்தாயிற்று. பள்ளிக்கூடம் பொங்கலை ஒட்டி அடைக்கப்பட்டிருந்தது. அதனால் அவர்களைக் காரில் பள்ளிக்கு இட்டுச் செல்லும் வேலை இல்லை. பலகாரம் சாப்பிட வேண்டுமென்ற பசியுணர்வு அவனுக்கு இல்லாமல் இல்லை. தன்னைப்பற்றிய 'கதை'யை நினைத்துப் பார்த்துக்கொண்டே இருந்துவிட்டான் போலும்! வினா தெரியும் போது, அவனுக்குத் தான் ஓர்

அநாதை-ஏழை என்ற உண்மைதான் அவனை வரவேற்றது. அவன் எதை மறப்பான்? எதை நினைப்பான்?

வறுமை காரணமாக, தன்னை அநாதைச் சிசுவாக விட்டு விட்டுத் தற்கொலை செய்துகொண்ட தன் பெற்றோரைப்பற்றி அவன் கேள்விப்பட்டானே, அந்தச் சோகத்தை நினைப்பானா?

தஞ்சை, திருச்சி, சேலம், சென்னையென்று சுற்றி அலைந்து தன் சாண் வயிற்றைக் கழுவி மூடிக்கொண்டு உயிருடன் வாழ்ந்து வருகிறானே, அந்தத் தன்னம்பிக்கையை எண்ணுவானா அவன்?

கண்களை மூடிக்கொண்டு காசி நின்றுவிட்டார். அவருக்குத் தம் குடும்பத்தின் ஞாபகம் வந்திருக்கும். அவர் சுய நினைவு பெற்றார். "அழாதே, பாபு. உன்னோட நல்ல புத்திசத்திக்கு ஆண்டவன் உன்னை ரொம்ப மேன்மையாய் வச்சிடுவான். என்னை நம்பு. சரி, சரி, வா சாப்பிடலாம். தோசை சுட்டது ஆறிப்போயிடும். காப்பியை பிளாஸ்கிலே ஊத்தி வச்சிட்டு வந்தது நல்லதாய்ப் போச்சு. உனக்குத்தான் எதுவும் சுடச்சுட வேணுமே!" என்றார்.

நன்றியறிவு மிகும்படியாகப் பாபு கண்களை உயர்த்திக் காசியை நோக்கினான். பின்னர், "நீங்க போங்க. நான் பின்னாடியே வாரேன். நாம ரெண்டு பேரும் சேர்ந்து போக வேணாமுங்க, அண்ணே!" என்று தெரிவித்தான்.

"அதுவும் சிலாக்கியந்தான், பாபு!"

* * *

பச்சைமல்லித்தழைத் துவையல் என்றால் வீட்டுத் தலைவருக்கு மட்டுந்தான் மிகவும் பிடிக்கும் என்பதில்லை. அவ்வீட்டின் எடுபிடிப் பையனான பாபுவுக்கும் அதிகமாகப் பிடிக்கும். ஆகவே, வழக்கத்துக்கு மாறாக, அவன் அன்று தினம் ஆறு தோசை தின்றான்; நல்ல காப்பியும் கிடைத்தது. பின், ஏப்பம் பறியக் கேட்கவும் வேண்டுமா? அப்போதுதான், காசிமீது புகார் செய்ய வேண்டுமென்று தோன்றியதையும்,

பின்னர் அவரை மன்னித்ததையும் நினைக்க வேண்டியவன் ஆனான். அச்செயல் அவனுக்கே வேடிக்கையாகக்கூட இருந்தது. 'நான் சின்னப் பிள்ளை. காசி அண்ணனோ பெரிய மனுசர். நானாவது அவரை மன்னிக்கிறதாவது!' என்று சிந்தனை செய்த நேரத்தில், அவனையும் அறியாமல் நமட்டுச் சிரிப்பு வெடித்தது.

"என்னப்பா நீ உன்பாட்டுக்குச் சிரிச்சுக்கிறே?" என்று கேட்டார் காசி.

"ஒண்ணுமில்லீங்க. சும்மாதானுங்க!" என்றான் பாபு. மறு கணம், காலையில் தான் அம்மாவிடம் காப்பி சாப்பிட்டதாகப் 'பொய்' சொன்ன நடப்பை நினைத்து அழுததையும் நினைவில் நிறுத்திப் பார்த்தான்; மறுமுறையும் பொய் சொல்லக் கூடாது, அது தப்பு என்னும் தீர்மானம் பண்ணினான். உடனே தான் நினைத்திருந்ததையும், பின்னர்க் காந்திஜியின் வாக்கு தன் மனத்தை மாற்றியதையும் விரிவாக எடுத்துரைத்தான் பாபு.

காசி துளிகூட வருத்தப்படவில்லை, பாபுவின் பேரில்; வெள்ளையாகச் சிரித்தார். "பாபு, எனக்குக்கூடக் காந்தித் தாத்தாவோட வாசகங்களை ஒனக்குப் புரிஞ்ச மட்டுக்கும் ஒவ்வொன்னாய் நிதம் நிதம் சொல்லிக் காட்டேன்!" என்று தயவுடன் கேட்டுக்கொண்டார்.

"நான் சொன்னால் எடுபடாதுங்க, அண்ணே. சைனா பஜாரிலே காந்திஜியின் பொன்மொழிப்புத்தகம் ஒண்ணு இனாமாய்க் கிடைச்சுது. அதைத் தாரேன். படிச்சுக்கங்க. அப்பாலே உங்களைச் சுத்தி ஒரு புது உலகம் தெரியத் தொடங்குமுங்க," என்றான் சிறுவன் பாபு.

ஒரு விநாடி, காசி அண்ணன் கல்லாகச் சமைந்து விட்டார்.

பாபுவுக்கு எதுவும் மட்டுப்படவில்லை. "என்ன அண்ணே, கம்னு இருக்கீங்க?" என்று துருவினான்.

"கம்னு இருக்காம, பின்னே என்னாப்பா செய்கிறது? நான் படிக்காத மூடமப்பா!" என்று கண் கலங்கினார்.

"அப்படியா?" என்று ஆச்சரியப்படலானான் பாபு. "அப்படின்னா, நான் படிச்சுப் படிச்சு சொல்லுறேனுங்க, நீங்க கேட்டுக்கிடலாம்," என்றும் ஆறுதல் கூறினான்.

சிறுவனின் பேச்சு காசிக்கு மகத்தான ஆறுதலைத் தந்திருக்க வேண்டும். "நல்லதப்பா!" என்றார்.

அப்பொழுது, பாபு தன் நினைவை மூட்டை கட்டி வைத்துவிட்டு, தன்னுடைய எஜமானரைப்பற்றித் தீவிரமாகச் சிந்திக்கலானான். அவன் முன்னே மூன்று கேள்விகள் விசுவரூபம் எடுத்தன.

அவையாவன :

1. வீட்டுத் தலைவியிடம் ஏன் ஒரு விதமான புதிய சோகம் காணப்படுகின்றது?
2. வீட்டுத் தலைவர் ஏன் கால்நடையாக நடந்து வந்தார் ?
3. வீட்டின் முதலாளி வேலையாள்களுக்கு ஏன் பொங்கல் இனாம் வழங்கவில்லை?

கடைசிக் கேள்விக்காவது காசி அண்ணன் விடை சொல்லியிருக்கக்கூடாதா ?

பாபுவுக்குத் திக்குத் திசை புரியவில்லை. ஏதோ ஒரு மர்மமான துன்பம் இந்தப் பங்களாவில் ஊடாடுகிறது ! இவ்வுணர்வு மட்டும் அவனுக்கு நிதர்சனமாகப் புரிந்தே இருந்தது. இடையிடையே அவனுள் ஒரு குரல் கேட்டது. 'உனக்கு ஏன் இந்த அநாவசியமான விசாரமெல்லாம்?' என்ற குரல்தான் அது. அதற்குப் பெயர்தான் மனச்சாட்சியோ? அதே மனச்சாட்சி மறுகணம் அவனைத் தட்டிக் கொடுக்கவும் செய்தது. 'உண்ணும் சாப்பாட்டுக்கும் ஒரு கடமை உண்டல்லவா? அந்தக் கடமைக்கும் நன்றிக்கடன் இல்லையா?' என்று அவன் தன்னுள்ளே சொல்லிக்கொண்டவுடன்தான், அவனுக்கு அத்தகைய பாராட்டு கிட்டிற்று.

மாடியில் ராமனும் சீதையும் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

விஷயம் புரியாத பருவம். விளையாட்டுப் பிள்ளைகள்.

அவர்களுக்குத் தங்கள் பங்களாவில் இழையோடியிருந்த துயரத்தின் அடித்தளம் எங்கே புரியப்போகிறது, எப்படிப் புரியப் போகிறது?

பாபுவுக்கு அந்தப் பூஞ்சிட்டுக் கடிகாரந்தான் அவ்வப் போது ஆறுதலை அருள்வது வழக்கம். அதைப் பார்த்துக் கொண்டிருக்கையில், காரினின்றும் யாரோ இறங்கி வந்து கொண்டிருப்பதைக் கண்டு, மரியாதையாகச் சற்று ஒதுக்க மாக நிற்கத் தொடங்கினான்.

யாரோ ஒரு பெரிய மனிதர் வந்து நின்றார்; மெய்யாகவே, பெரிய மனிதர். பெரிய உடம்பு இருந்தால், அவர் சிறிய மனிதராகவா இருக்க இயலும்! அவர் நடையைச் சுற்றிலும் வெறிக்கப் பார்த்தார். பிறகு, பூஞ்சிட்டுக் கடிகாரம் அவர் கண்களில் சிக்கியது. 'அச்சா!' என்றார்.

யாரோ சேட் போலிருக்கிறது!

உடனே பாபு, "ஐயா மாடியிலே இருக்காங்க!" என்று விவரம் சொல்லி, மாடிக்கு வழியையும் காட்டினான். வந்தவர் மேலே—அதாவது, மேல்மாடிக்குப்—போனவுடன், காசியைக் காண விரைந்தான் பாபு; தன்னுள் உறுத்திக்கொண்டிருந்த மூன்றாம் கேள்விக்கு விடை கேட்டு நின்றான்.

"பாபு, ஐயா மண்ணடியிலே வச்சிருந்த பெரிய ஜவுளிக் கடை தீபாவளி சமயத்திலே எதிர்பாராம நெருப்புப் பிடிச்சு பூராவும் எரிஞ்சு போயிட்டுது. அதனாலேதான் ஐயா மன சொடிஞ்சு போயிட்டாங்க. அந்த வருத்தம் தாங்காமல், புத்தி கூட மாறியிருந்திச்சு கொஞ்ச நாளைக்கு. நீ இங்கே வேலைக் குச் சேர்ந்த நேரத்திலேதான் ஐயா தெளிவடைஞ்சாங்க. பொங்கலுக்கு வளமையாய்க் கொடுக்கக்கூடிய புதுசு, இனாம் எல்லாத்தையும் அதனாலேதான் நிப்பாட்டிப்புட்டாங்க!..."

காசி பேசிக்கொண்டிருக்கும்போதே, மாடியிலிருந்து அழுத்தப்பட்ட மின்சார மணி அலறியது. ஆகவே, காசி பேச்சை அத்துடன் நிறுத்திவிட்டு, மாடிக்கு விரைந்தார்.

பாபு தன் முதலாளிக்கு ஏற்பட்ட விதியை நினைத்து மனம் உருகினான்; ஆனந்தரங்கத்தின் குடும்பம் சீரடைய ஆண்டவனைப் பிரார்த்தித்தான்; காசி காப்பியும் கையுமாக மாடிக்குச் சென்றதைக் கவனித்தான்; கயிற்று மிதியடியில் பறந்துகிடந்த அன்றையச் செய்தித்தாளை எடுத்துப் பிரித்தான்; புதிய சீட்டுக்குலுக்கலின் தேதி அச்சாகியிருந்த இடத்தை வெகு உன்னிப்புடன் கவனித்தான்; தன்னுடைய சொக்காயின் பையையும் காற்சட்டையின் பையையும் தடவிப் பார்த்தான்; தடவித்தடவிப் பார்த்தான்.

அந்த இரண்டு பைகளுமே காலியாக இருந்தன.

ஏழை-அநாதைச் சிறுவன் பாபுவுக்குச் சிரிக்க மட்டுமே முடிந்தது அப்போதைக்கு!

அவன், சிரிப்பு அடங்குவதற்குள் அங்கிருந்து நகர்ந்தான்; கார் நிறுத்தும் கொட்டகைக்குப் பின்புறமிருந்த தன்னுடைய ஓய்வறையை அடைந்தான்; மகாத்மாஜியின் வாசகங்களைப் படித்தால்தான் தன் மனம் சாந்தி பெறும் என எண்ணி, அச் சிறு புத்தகத்தைப் பிரித்தான்.

அதில் அவன் பார்வையைக் கவர்ந்த மணிவாசகம்:

**'தியாகம் செய்வதனால் ஒரு ·வித இன்பம் பிறக்கா விட்டால், அந்தத் தியாகம் தியாகமே அல்ல!'**

அவனுக்கு அப்பொன்மொழியின் பொருள் நன்றாகப் புரிந்தது. 'பாபுஜி, என்கிட்டே தியாகம் செய்ய என்ன இருக்கு, என்னோட இந்த அற்பமான உயிரைத் தவிர?' என்று மனம் நெகிழ்ந்தான்.

அட்டையில் ஒட்டித் தொங்கவிடப்பட்டிருந்த அண்ணல் காந்தி அடிகள் அப்போது பொக்கைவாய்ப் புன்னகை உதிர்த்ததைப் பாவம், பாபு அறிய நியாயம் இல்லை!...

## 'என் கடன்'

ஆனந்தரங்கம் அவர்களின் பங்களாவில் இருந்த குழாய்கள் எல்லாம் ஓரவஞ்சனையில்லாமல் இருபத்து நான்கு மணி நேரமும் தண்ணீரைப் பொழிந்துகொண்டேயிருக்கும். அந்தப் பண்பு இப்போதும் தொடர்ந்தது.

பாபு ஒரு வாய்க்கு நாலு வாயாகத் தண்ணீர் குடித்து வைத்தான். மதியச் சாப்பாடு அவனுக்குக் கிடைப்பதற்கு நிச்சயம் இரண்டு — இரண்டரை மணி ஆகும். எல்லோரும் சாப்பிட்டாக வேண்டுமே! ராமன்—சீதைக்குப் பகல் உணவு பரிமாற வேண்டும். மேஜைச்சாப்பாடு. ஆமாம், சீமான் பிள்ளைகளுக்குத்தான். பாபு எங்கே போவது, மேஜைக்கு? குளித்துவிட்டு, உலர்ந்த உடைகளைப் போட்டுக் கொண்டு, தலையையும் சீவிக்கொண்டான். பயந்துவிடப் போகிறீர்கள்? தலையை வாரிக்கொண்டான். உடைசல் கண்ணாடி ஒன்று அவனுக்கு அவன் முகத்தைக் காண்பித்தது.

முகத்திற்கென்ன?

ராஜகளை ஓடியது.

அவன் ராஜாவாகத்தான் பிறக்கவில்லை. 'அப்பா!... அம்மா!' என்று வழக்கம் போல அவன் தன்னை ஈன்றவர் களை—முகம் காணக் கொடுத்து வைக்காத அந்தத் தெய்வங் களை — நிறைந்த மனத்துடன் நினைத்துக் கைகளைக் கூப்பினான். மதுரையில் அநாதை விடுதியில் தான் படிப்பறிவு பெற்ற நிகழ்ச்சியும் சிந்தையில் எழுந்தது. உடனே அவனுக்குக் காசியின் ஞாபகம் வந்தது. படிக்காத அந்தத் தந்தை உள்ளம் சற்று முன்னர்த் தம் குடும்பத்தின் கடிதத்தைப் படிக்கச் சொல்லிக் கேட்டு ஆனந்தப்பட்ட நிகழ்ச்சியும் நெஞ்சில் நிறைந்தது. காசி அண்ணன், துளசிங்கம், காவேரி ஆகிய மூவரும் சேர்ந்து ஒரு பரிசுச்சீட்டு வாங்கிய தகவலும்

கிடைத்தது. 'எனக்கு லட்சம் ரூபாய் எதுக்கு? எனக்கு வேண்டியது சாண்வயிற்றுக்குச் சோறு! அவ்வளவுதான். கேவலம், ஏழை-அநாதைப் பயலுக்கு இதைத் தவிர வேறே ஆசையே கிடையாது! இந்த மூணு பேரும் சேர்ந்து வாங்கியிருக்கிற சீட்டுக்கு ஏதானும் பரிசு விழுந்தால் தேவலாம். பாவம், ஏழைபாழைங்க!... கஷ்டங்கள் விடியும்! பணம் விழுந்தாக்க, அப்பறம் இந்தப் பாபுப் பயலை 'யாருடா பயலே நீ?'ன்னுதான் இவங்க கேட்பாங்க; கேட்டுட்டுப் போகட்டும். பணம் வந்திட்டால், குணம் மாறிப் போயிடும்னு சொல்லிக்கிறாங்க!... பணம் வந்திட்டால், குணம் மாறாமல் இருந்தாக்க, என்ன கேடாம்? எனக்கென்ன புரியுது. இந்த மாதிரிப் பெரிய சங்கதியெல்லாம்!' என்று யோசித்தான். ஒரு கணம், காசு இருந்தால், ஒரு சீட்டு வாங்கிப் போடலாமே என்று ஒரு சபலம் வரும்; மறுகணம், காசுக்கு – ஒரு ரூபாய்க் காசுக்கு—எங்கே போவதாம் என்று ஓர் ஏக்கம் பிறக்கும். அடுத்த கணத்தில், அப்படியே பணம் கிடைத்துச் சீட்டு வாங்கினாலும், தனக்காவது பரிசு விழும் அதிர்ஷ்டம் வருவதாவது என்று விரக்தி ஏற்பட்டுவிடும். 'சே! பெரிய தலைவலி இது! வேண்டாம் இந்த விவகாரம்!' என்று கடைசியில் ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டியவன் ஆனான் பாபு.

வெளிவாசலில் பிச்சைக்காரன் அலறிக்கொண்டேயிருந்தான்.

பாபு எஜமானியிடம் சொல்ல ஓடினான்.


அம்மாவைக் காணவில்லை. காசியையும் காணோம்.

அடுப்படியை அடைந்து, பழைய சாதத்தில் இரண்டு அகப்பை எடுத்து ஒரு கிண்ணத்தில் போட்டுக்கொண்டு வாசற்புறம் வந்தான் பாபு.

அதற்குள் தோட்டக்காரத் துளசிங்கம் பிச்சைக்காரனை ஏசி விரட்ட முயன்றுகொண்டிருந்தார்.

விவரம் அறிந்ததும், கோபம் மூண்டது பாபுவுக்கு. "நீங்களும் ஓர் ஏழையாக இருந்துங்கூட, உங்களுக்கு இந்தப் பிச்சைக்காரனை விரட்டியடிக்க மனசு வந்திச்சு?..."

என்று கோபித்துக்கொண்டான்; பிச்சைக்காரனையும் அவனுடைய மகளான சிறுமியையும் இரக்கத்துடன் நோக்கினான்; கொண்டுவந்த சாதத்தைப் பிச்சைக்காரனின் சட்டியில் கொட்டினான்.



"தம்பி, நீங்க நல்லா இருக்கோணும்!" என்று வாழ்த்தினான் பிச்சைக்காரன்.

"இந்தச் சோறு எங்க முதலாளியோடதுப்பா. அவங்களை வாழ்த்து," என்றான் பாபு.

"நல்ல பிள்ளை!" என்று சொல்லிக்கொண்டே நகரலானான் பிச்சைக்காரன்.

அவனையும் அவனது வறுமையையும் அறிந்ததும், பாபுவுக்கு அழுகை முட்டிக்கொண்டு வந்தது. தன் பெற்றோர்களின் மரணத்துக்கும் இதே வறுமைதானே காரணமாக இருந்தது என்பதை எண்ணிப் பார்த்தபோது, அவன் செருமத் தொடங்கிவிட்டான். 'அப்பாவும் அம்மாவும் இப்போ உயிரோடு இருந்திருந்தா, நான் மாடாய் உழைச்சு அவங்களைக் காப்பாற்றியிருப்பேனே! ஐயையோ!' என்று மனம் நெகிழ்ந்து கண்ணீர் பெருக்கினான்.

அந்தப் பிச்சைக்காரச் சிறுமியைக் கண்டவுடன், அவன் மகாத்மாவைப்பற்றி ஒரு கூட்டத்தில் கேட்ட பேச்சு

நினைவுக்கு வந்தது. நவகாளி யாத்திரையின்போது, ஓர் ஏழை முஸ்லிம் சிறுமி நோய் வசப்பட்டுக் கிடந்ததைக் கண்டு, உடனே அச்சிறுமி மீது தம் போர்வையை எடுத்துப் போர்த்தி, அச்சிறுமிக்கு மருந்தும் கொடுத்தாராம். அம்மகானை எதிரி என்று நினைத்த மக்கள் அவரது தயாள சிந்தையைக் கண்டு "நீங்க கடவுளின் தூதர்" என்று கும்பிட்டார்களாம். அதற்குப் பாபுஜி, "என் கடன் பிறருக்குப் பணி செய்து கிடப்பதே. நான் உண்மை ஊழியன். எவரிடமும் நீங்கள் அச்சம் கொள்ளாதீர்கள்; பிறரையும் அச்சத்துக்கு உள்ளாக்காதீர்கள். ஒரே கடவுள் படைத்த மக்கள் நாம்!... நாம் எல்லோரும் சமமாக வாழ உரிமை பூண்டவர்கள்!" என்றாராம். இவ்வுண்மையின் நிகழ்ச்சியை நினைத்துப் பார்த்தபோது பாபுவின் மேனி சிலிர்த்தது.

* * *

"டேய், பாபு! நைனா கூப்பிடுறாங்கடா!" என்று ஓடி வந்து சொன்னான் ராமன்.

பாபு, பிரித்த புத்தகத்தைப் போட்டுவிட்டு, மாடிக்கு ஓடினான்.

"ஏண்டா, ராஸ்கல்!.... பங்களாவுக்குப் பெரிய மனுசங்க வந்திருக்கிறப்ப, நீ இங்கே வந்து நின்னா, என்னடா? கீழே என்ன செய்யிறே?" என்று கோபமாகச் சத்தம் போட்டார் ஆனந்தரங்கம்.

பாபு அச்சம் சூழ, கைகளைப் பிசைந்துகொண்டு நின்றான்; முதலாளியின் முகத்தைப் பரிதாபம் சூழப் பார்த்தவாறு நின்றிருந்தான்.

"ஐயாவுக்கு ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டாடா!"

"ஆகட்டுங்க, எசமான்!"

ஒரு நொடியில் தண்ணீர் கொணர்ந்தான் பாபு. ஆனந்தரங்கத்தின் கைகளில் கொடுக்கப் போனான்.

"சீ!... ஐயாகிட்டே கொடேண்டா!" என்று மீண்டும் கோபித்துக்கொண்டார் ஆனந்தரங்கம்.

பாபுவின் அழகான முகம் சிறுத்தது. தண்ணீர்க் குவளையை அந்தப் புதிய மனிதரிடம் நீட்டினான்.

அந்தப் பெரிய மனிதர் தண்ணீரை வாங்கி ஒரு 'மிடறு' குடித்திருப்பார்; மறுவாய் குடிப்பதற்குள், 'குபுக்'கென்று வாந்தி எடுத்துவிட்டார்.

"ஐயாவோட தலையைப் பிடிச்சுக்கடா!"

"ஆகட்டுங்க."

"உனக்கா ஒண்ணும் செய்யத் தெரியலையே! எல்லாத்தையும் சுத்தம் பண்ணுடா, பயலே!" என்று உத்தரவு போட்டார் ஆனந்தரங்கம்.

"ஆகட்டுங்க!" என்று பணிவுடன் செப்பினான் சிறுவன். உடனே, கண்மூடிக் கண் திறப்பதற்குள் எல்லாவற்றையும் சுத்தம் செய்துவிட்டு, கைகளைக் கழுவிக்கொண்டு வந்து நின்றான்.

ராமன் முகத்தைச் சுளித்துக்கொண்டு ஓரமாக நின்றான். வேடிக்கை மிகுந்த சிரிப்பு அவனது கறுத்த உதடுகளை அலங்காரம் செய்தது.

இக்காட்சி பாபுவை என்னவோ செய்தது. 'கடவுளே!' என்று உள்ளூர வருந்தியது அப்பிஞ்சு நெஞ்சு. நவகாளி யாத்திரையின் போது, காந்திஜி அந்த ஏழை முகமதியச் சிறுமியின் முகத்தைச் சுத்தம் செய்ததாகக் கேள்விப்பட்ட நிகழ்ச்சியை அவன் நினைவுக்குக் கொண்டுவந்தான். அவன் மனம் ஒருவாறு சமாதானம் அடைய முயற்சி செய்து கொண்டிருந்தது. அவன் தன் நினைவுடன் எதிரே பார்த்த சமயத்தில் தன் முதலாளியும் அந்தச் சேட்ஜியும் ஏதோ அந்தரங்கம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"டேய் பயலே! ஏண்டா இப்பிடி நின்னுகினு இருக்கே? போடா. வேணும்னா கூப்பிட மாட்டேனா?" என்று கூச்சலிட்டார் ஆனந்தரங்கம்.

தயங்கியபடி நகர முயன்றான் பாபு.

''ராஸ்கல், போயேண்டா!''

பாபு திரும்பிவிட்டான்; பயத்தோடு திரும்ப வேண்டியவன் ஆனான். 'நானும் எவ்வளவோ முதலாளிங்களைப் பார்த் திருக்கேன், இந்தச் சின்ன வயசுக்குள்ளே. ஆனா, இந்த எசமான் ஒரு தனிரகம்! அம்மாடி!... ஆமா, ராஸ்கல்-ராஸ்கல்னு ஐயா திட்டினாரே, அதுக்கு என்னா அர்த்தமோ?... கடவுளே, இந்தக் கும்பிக்காக எத்தனை பாடு!... எத்தனை சோதனை! ... வேலைக்காரப் பயல்னா எத்தனை இளக்காரம்!...' என்று சங்கடப்பட்டான்; கீழே வந்து நின்றான். காந்திஜியின் படத்தையே அன்போடு, பாசத்தோடு, பயத்தோடு, பக்தியோடு பார்த்தது பார்த்தபடி நின்றான். அவனையும் மீறிய விதத்திலே அவன் கண்கள் நிரம்பி வழிந்தன.

அச்சமயத்தில் மாடிக்குச் செல்வதற்காகக் கொத்துச்சாவி யுடன் வந்தாள் அபயாம்பாள்; ''பாபு!'' என்று கலவரத்துடன் விளித்தாள்.

அப்போதுதான் பாபுவுக்குச் சுயநினைவு மீண்டது. உடனே, கண்ணீரைத் துடைத்துக்கொண்டான்.

''ஐயா கோபிச்சுக்கிட்டாங்களா?''

''இல்லையே!''

''ஐயாவுக்கு மனசு சரியில்லே, அப்படிக் கோபிச்சுக் கிட்டாலும், நீ பெரிசாய் எடுத்துக்கிடாதேப்பா!... பகவான் சோதிக்கிறான்!'' என்றாள் வீட்டின் தலைவி.

பாபுவுக்கு அப்பேச்சு உள்ளத்தைத் தொட்டது. ''அதெல்லாம் இல்லீங்க. எதையோ நினைச்சேன், கண் கலங்கிடுச்சு,'' என்று பூசி மெழுகினான், காப்பி சாப்பிட்டு விட்டதாக அம்மாளிடம் காலையில் பொய் சொல்ல நேர்ந்ததற்காக, அம்மாளுக்குத் தெரியாமல் அழுதானே பாபு! இப்போது, அவன் அழுத அழுகை அம்பலமாகிவிட்டது!

ராமனும் சீதையும் ஓடிவந்தார்கள்.

"அம்மா, துட்டு குடும்மா!" என்றாள் சீதை, கெஞ்சுதலுடன்.

"மம்மி! சேஞ் வேணும்மா!" என்று நாகரிகமாகக் கெஞ்சினான் ராமன்.

"எதுக்கு இப்போ துட்டு? இன்னம் கொஞ்ச நேரத்திலே தான் சாப்பாடு சாப்பிட்டுப்பிடலாமே!"

"ஊஹும், அதெல்லாம் சரி. இப்போ காசு வேணும்! பிஸ்கட் வாங்கணும்!" என்றாள் சீதை.

"உனக்கு என்னா வேணும், ராமா?"

"எனக்கு ஐஸ் ஃப்ருட்!"

ஆளுக்கு ஒரு ரூபாய் கொடுத்தாள் அபயாம்பாள். "பாபு, இந்தா இரண்டரை ரூபாய். இவுங்களுக்கு ஆளுக்கு ஒரு ரூபாய்க்கு வேணுங்கிறதை வாங்கி வந்து கொடுத்திட்டு, பாக்கி ஐம்பது காசை நீ எடுத்துக்க!" என்றாள்; இரண்டரை ரூபாயை நீட்டினாள்.

பாபு மௌனமாக அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டான்.

அபயாம்பாள் மாடிக்குச் சென்றதுதான் தாமதம்; புறப்படப் போன பாபுவிடம் மெள்ள அண்டி வந்தான் ராமன். "பாபு, உனக்கு எதுக்கடா ஐம்பது காசு? அதுக்கும் சேர்த்து, சின்ன எசமானுக்கு பிஸ்கட் வாங்கி வந்துடு. நீ தின்னுப் பழக்கப்பட்ட ரொட்டி வேணாம். எனக்குப் பிரிட்டானியா பிஸ்கட்தான் வேணும். மாற்றி வாங்கியாந்தாயோ, உன் மூஞ்சியிலே விட்டு வீசிப் போடுவேன்!"... என்று எச்சரித்தான்.

பணக்காரப் பிள்ளைகளுக்கென்று இப்படியொரு வாய்க் கொழுப்பா?

பாபு பதில் ஆடவில்லை; மௌனமாகப் போய்விட்டான்.

பத்து, பதினைந்து நிமிஷம் கழிந்திருக்கும்.

திரும்பினான் பாபு. ஒரு கையில் பிஸ்கட் இருந்தது; அடுத்த கையில் 'ஐஸ் ஃப்ரூட்' வழிந்தது.

"வாங்கி வந்திட்டியாடா?" என்று கேட்டான் ராமன்.

"ஓ!"

"எனக்கு?" என்றாள் சீதை.

"ஓ!"

பிஸ்கட்டைப் பெற்றுக்கொண்ட ராமன், "இது ஐம்பது காசுதானே?" என்று அதிகாரமாகக் கேட்டான்.

"இல்லேப்பா, ராமா. அம்மா ஆர்டர் கொடுத்ததுக்குத் தான் வாங்கியாந்தேன்!" உண்மையின் கம்பீரத்துடன் பாபு பதிலிறுத்தான்.

பாபுவின்பேரில் ஆத்திரம் பொங்க, அவனை விழுங்கி விடுகிற மாதிரி பார்த்தான் ராமன். பொங்கல் புதுச்சட்டை பளபளத்தது.

சீதை பனிக்கட்டிப்பழத்தை—ஆமாம், 'ஐஸ் ஃப்ரூட்டைச்—சுவைப்பதில் ரசனை காட்டினாள்.

ராமன் பிஸ்கட்டைப் பார்த்தான்.

அபயாம்பாள் முகப்புக்கு வந்ததும், அவளிடம் மீதமிருந்த காசை நீட்டினான் பாபு.

எஜமானி அம்மாள் பாபுவை அனுதாபத்துடனும் பாசத்துடனும் பார்வையிட்டாள்.

பாபு உள்ளே எதையோ கண்டு திகைப்படைந்து, அவசரமாக ஓடினான்.

நடையிலிருந்த பூஞ்சிட்டுக் கடிகாரத்தை எடுத்துக் கையில் ஏந்திய காசி, அருகில் நின்ற சேட்ஜியைத் தொடர்ந்து, அவர் காரில் அக்கடிகாரத்தை வைத்ததைக் கண்டதும், அப்படியே கல்லாய்ச் சமைந்துவிட்டான் பாபு!

## சத்தியக் கவசம்

பகல் உணவு கொள்ளப் பாபுவை அழைத்தார் காசி; "வாப்பா. நாம ரெண்டு பேரும் சாப்பிடலாம். நாமதான் பாக்கி !" என்று அறிவித்தார்.

பாபுவின் சோம்பியிருந்த முகம் சற்றே தெளிவு பெற முயன்றது. "ஐயா சாப்பிட்டாங்களா, அண்ணே ?" என்று பரிவுடன் கேட்டாள்.

"அதுக்காக... சாப்பிடாம இருப்பாங்களா?" என்று எதிர்க்கேள்வி கேட்டார் காசி.

'அதுக்காகவா ? எதுக்காக?' என்று ஒன்றும் புலனாக வில்லை, பாபுவுக்கு. விவரம் கேட்க விழைந்தபோது, காசி தாமாகவே, எதையோ சொல்ல விரும்புவதைப் போன்ற ஒரு முகக்குறியைக் கண்டு, காத்து நின்றான்.

"பாபு, நம்மளுக்குப் பெரிய இடத்து விஷயமெல்லாம் மட்டுப்படாது. நாம வேலை பார்க்கிற இந்தப் பங்களா வேலை ரொம்ப நாளைக்கு நீடிக்கிறதாட்டம் தோணல்லே. அதுக்குக் காரணம், நம்ப எஜமானர் ஐயாவோட நிலைமைதான். உனக்குச் சில சமாசாரம் தெரிய நியாயமில்லை. அதெல்லாம் புரியக்கூடிய வயசும் இல்லே. ஆனாலும், சொல்லிப்பிடுறேன். ஐயா ஒரு பெரிய ஜவுளிக்கடை வச்சிருந்தாங்க. அதிலே, தீபாவளி சமயத்திலே தீப்பிடிச்சு துணிமணி எல்லாம் எரிஞ்சு சாம்பலாகிடுச்சு. விதி ஓர் அதிசயமாவே விளையாடிடுச்சு நெருப்பு ரூபத்திலே !... அந்த நஷ்டம் ஒரு லட்ச ரூபாய்க்கு மேலே வந்திடுச்சாம். இது போக, நாளாவட்டத்திலேயும் கடன் கப்பி வாங்கியிருந்திருக்காங்க போலே. எல்லாக் கடன் களும் சுமந்து போயிட்டா, சமாளிக்க முடியுமாப்பா ? கடன் காரக நச்சரிச்சிருக்காங்க. மனசு தாளாம, தன்னோட பெரிய

காரை ஒரு கடன்காரனுக்குக் குடுத்து அடைச்சிட்டாராம். இன்னொரு கடன்காரன் தான் கொஞ்ச முந்தி அழகான கடிகாரத்தை வாங்கிக்கினு பறிஞ்சிட்டான். ஜவுளிக்கடைக்காகப் பட்ட கடனுக்கு இந்தப் பங்களாவையே வித்து அடைக்கணும்னு ஒரு யோசனை ஐயாவுக்கு இருக்கும் போலே. பாவம், அம்மாவுக்கு மூஞ்சியிலே களையே இல்லே! பணக்காரங்க வாழ்க்கை பொய்யானது போலிருக்குது. இதுக்கு நம்ம கஷ்டம் எவ்வளவோ சிலாக்கியம்!... இந்தக் கஷ்டத்திலேதான் ஐயா நம்மளுக்குப் பொங்கல் இனாம் கொடுக்கல்லே!... என்னப்பா, நீ இப்படித் திகைச்சிட்டே?... வா, நாம நம்ம வயித்துப் பாட்டைப் பார்க்கலாம்!...'' என்று விளக்கமாகக் கூறி நிறுத்தினார் காசி அண்ணன்.

பாபுவின் முன் உலகம் சுழல்வது போலிருந்தது. இதற்கு முன் மாம்பலத்தில் வேலை பார்த்த இடத்தில் ஏற்பட்ட திடீர்க் கஷ்டத்தின் காரணமாக, தன்னை வேலையை விட்டு நீக்கி விட்ட சம்பவமும் மனத்திரையில் படம் காட்டியது. தஞ்சாவூரில் ஒரு டீ கடையில் வேலை செய்கையில் கடை நொடித்துவிடவே, கடைக்காரன் 'மூதேவிப் பயலே! நீ வந்துதாண்டா கடை விடியல்லே!' என்று ஏசிப் பேசித் துரத்திவிட்ட நிகழ்ச்சியை அவனால் மறக்க முடியவில்லை. 'நான் அதிர்ஷ்டம் கெட்டவனா?' என்று மனம் கலங்கினான்; இங்கே முதலாளி போகச் சொல்வதற்கு முன்னதாக, எங்காவது வேறிடத்துக்குப் போய்விடலாமா என்றுகூட எண்ணினான். எங்கே வேலைக்குப் போவது, எப்படி வயிறு வளர்ப்பது?—இந்தத் துயரங்கள் அவனுக்குக் கட்டை போட்டன. காசி அண்ணன், துளசிங்கம் தாத்தா, காவேரி அக்கா செய்வது போலப் பிறகு நடந்து கொள்ளலாமென்றும் முடிவு எடுத்தான். 'என்னோட கஷ்டம் இருக்கட்டும். ஆனா, பாவம் முதலாளி! தாய் மாதிரி உள்ள அந்த அம்மாளோட கஷ்டம் விடிஞ்சால் தேவலாம். அதுக்கு வழி?... கடவுளுக்குத்தான் தெரியும். நான் என்னத்தைக் கண்டேன்?... சின்னப்பிள்ளை!...' என்று நினைத்தான் பாபு.

காசி உறிஞ்சிய பொடி எவ்வளவு நாழிகைக்குத்தான் தாக்கு'ப் பிடிக்கும்?

"வாப்பா சாப்பிட !"

"நீங்க சாப்பிடுங்க. எனக்குப் பசிக்கல்லே!"

"பைத்தியக்காரப் பிள்ளையப்பா நீ. முதலாளியோட கதை உன்னோட பசியை அடைச்சுருச்சு போலே!... இவ்வளவு நல்ல மனசு கொண்ட ஒனக்கு மந்திரம் மாயத்திலே ஒரு லட்சம் பணம் கிடைச்சாலும் பரவாயில்லே. ஐயாவோட கஷ்டமெல்லாம் விடிஞ்சிடும். வெறும் கதை பேசி என்ன புண்ணியம்?...சரி, நான் போறேன். பசி வயித்தைக் கிள்ளுது !..." என்று சொல்லிவிட்டு, நடைக்குள் நடையைக் கட்டினார் சமையற்கலைஞர் காசி.

பங்களாவின் பயங்கர அமைதி பாபுவை என்னவோ செய்தது.

* * *

மண்ணடிக் கடைத்தெரு.

சுட்டுப் பொசுக்கும் வெயில்.

சுடாமல் பொசுக்கிய பசி.

பாபு அங்கும் இங்குமாக அலைந்தான்; திரிந்தான். கீழ் முனையில் இருந்தது ஒரு பிள்ளையார் கோவில். அதன் வாசலில் போய்க் குந்தினான். சின்னப்பிள்ளை, அவனுக்குத் தன்னைப்பற்றிய சிந்தனை இல்லை; தன் எஜமானரைப் பற்றின கவலைதான் மிஞ்சியிருந்தது. 'முதலாளி ஐயாவோட கடன் சுமை தீர்ந்து போயிடச் செய், அப்பனே !' என்று மன மாரப் பிரார்த்தித்துக்கொண்டான். அவ்விடத்தில் மேலும் உட்கார இருப்புக்கொள்ளவில்லை. எழுந்தான்; நின்றான்; நின்ற வாக்கில், கண்களை மூடிக்கொண்டான். ஓர் அழகான கனவு தோன்றியது !... 'ஆஹா!' என்று மெய்ம்மறந்து தன்னுள்—தனக்குத்தானே சொல்லிக்கொண்டே கண்களை மலரத் திறந்தான்; எதிர்க்கடையில் யாரோ ஒரு வாண்டு பரிசுச்

சீட்டு வாங்கியதைப் பார்த்தான். அவனுள் ஏக்கம் படர்ந்தது. கைகளை விரித்துப் பார்த்தான், எதுவும் இல்லை! சட்டைப் பையையும் கால்சட்டைப் பையையும் துழாவினான். முன் இருந்த கரும்புத் துணுக்குகூட இப்போது இல்லை.

நடந்தான் பாபு.

'ஒரு ரூபாய்க் காசு இப்போ என் கையிலே இருந்தா, எவ்வளவோ பூரிச்சுப் போயிடுவேனே!' என்று பிரமாதமாக ஆராய்ச்சி பண்ணியது அப்பிஞ்சு இதயம்.

ஒரு ரூபாய்க்கு எங்கே போவான்?

வேதனை, நெட்டுயிர்ப்பு, ஆசை, கனவு, லட்சியம், ஏக்கம், ஏமாற்றம் போன்ற வெவ்வேறு வகை கொண்ட உணர்வுகளால் உந்தப்பட்டான் அச்சிறுவன். 'பங்களாவிலே என்னைத் தேடினாலும் தேடுவாங்களே!' என்ற புதிய கவலை கலவரமாக உருவெடுத்தது. வேகமாகப் பங்களாவுக்கு விரைந்தான் பாபு; மாடிப்படியின் மேற்கட்டில் நின்றபடி, உள்ளே எட்டிப் பார்த்தான்,

ஆனந்தரங்கம் கணக்குப் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

அபயாம்பாள் சிந்தனை வசப்பட்டு, அருகில் அமர்ந்திருந்தாள். "நீங்க சொன்னபடி செஞ்சுப்பிடலாம். பழைய படி நாம புதுக்கோட்டைக்குப் போகப்படாதுங்க. வேறு எகங்காகிலும் போயிடலாம். ஒரு வீடா வாடகைக்குக் கிடைக்காம போயிடும்? விதி நம்பளை இப்படி ஆட்டிப் படைக்குதே!" என்று உருக்கமாகச் சொன்னாள்.

ஆனந்தரங்கத்தின் முகம் சலனம் அடைந்தது. "பிள்ளைகளை நினைக்கிறப்பதான் மனசு தாளல்லே, இனிமேல் எப்படித்தான் பஸ்ஸிலே கான்வென்டுக்குப் போகப் போகுதுங்களோ? ஊம்... அபயம்! லாட்டரி டிக்கட்டுங்களையெல்லாம் பத்திரமாய்ப் பீரோவிலே வச்சிருக்காயல்லவா? நமக்கு எங்கே விழுகப் போகுது? என்னமோ ஆசைக் கோளாறு.

இன்னம் நாலைஞ்சு நாள்கூட இல்லே குலுக்குறதுக்கு!'' என்றார் முதலாளி.

''எல்லாம் பத்திரமாகத்தான் வச்சிருக்கேனுங்க. பிள்ளைங்க பேருக்குத்தானே டிக்கட்டுகளை வாங்குனீங்க?''

''ஆமா, பேரெல்லாம் இப்போ முக்கியமில்லையாம், டிக்கட் யார் வச்சிருக்காங்களோ, அவங்களுக்குத்தான் பரிசு விழுந்தால் பணம் கிடைக்கும்!''

''என்னமோ, பகவான் சித்தம் எப்படி இருக்கோ, அதையுந்தான் பார்த்திடுவோம். மனசறிஞ்சு ஓர் ஈ எறும்புக்குக்கூட நாம தீங்கு செஞ்சதில்லே!''

''சரி, சரி, நீ நிம்மதியாவும் தைரியமாவும் இரு, வருத்தப்படுகிற விவகாரம் என்னோட இருக்கட்டும்!''

ராமனும் சீதையும் 'ஜாஸ்' சங்கீதத்தை இரசித்துக் கொண்டிருந்தார்கள்.

யாரோ தன் மண்டையில் அடிப்பது மாதிரியான ஒரு வலி பாபுவுக்கு எழத் தொடங்கியது. பாபு கீழே இறங்கினான்.

மாந்தருக்குள் ஒரு தெய்வமான — கண்கண்ட தெய்வ மனிதரான—காந்திஜியின் படத்தை நெஞ்சம் உருக, கண்ணீர் உருகி வழியக் கும்பிட்டான். 'பாபுஜி!...' என்று வாய்விட்டு அழைத்தான் பாபு. அவன் உள்ளத்தில் பலபல நினைவுகள் சத்தியத்தின் ஒளிபட்டு மின்னின. 'அப்படி மட்டும் நடந்து விட்டால்?... ஆஹா!' என்று மெய்ம்மறந்தான். 'என் நான் நினைப்பது போல நடக்கக்கூடாது?' என்று ஒரு தன்னம்பிக்கையும் ஒளி காட்டியது. ஏதோவொரு தீவிர சங்கற்பம் கொண்டவனுக்கு நேராக அவன் நடந்தான். அப்போது, அவனது காலடியில் ஏதோ தட்டுப்பட்டது. குனிந்து பார்த்தான், அநாதை பாபு.

ஒரு ரூபாய் நோட்டு!

பாபு அதைக் குனிந்து எடுக்கப் போனவன், பாம்பைக் கண்டாற்போலப் பின்னடைந்தான்; மறுபடியும் அந்த ரூபாய்த் தாளை விழித்துப் பார்த்தான். அந்த ரூபாய் நோட்டு அழகான

பரிசுச் சீட்டாக அவர் மனக்கண்ணில் தோன்றியது. அப்போது அவன் மனச்சாட்சியும் விழித்துக்கொண்டது. மகாத்மா காந்தி அடிகளின் குரலொன்று கம்பீரமான ஆணையாக ஒலிப்பது போல ஓர் உள்ளுணர்ச்சி பீறிட்டது. "சத்தியந்தான் என் கவசம்! அதுவேதான் என்னை எதிலிருந்தும் காப்பாற்றிக் கொண்டு வருகிறது!..." என்ற வாசகம் அவனை மெய் சிலிர்க்க வைத்தது. 'கவசம்னா பாதுகாக்கிற பொருள் போலே. நல்ல சமயத்துக்கு என்னைக் காப்பாத்திடுச்சு காந்தி வாசகம். ம்... நான் கெட்ட நோக்கத்தோடவே இந்த ஒரு ரூபாய் நோட்டைப் பார்க்கலைதான். ஆனாலும், நானே என்னோட புத்தியை என்ன கண்டேன்! பாபுஜி!..." என்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். தெளிந்த அமைதி சுரந்தது அவனது இளம் உள்ளத்தில். பிறகு, அந்த ரூபாய்த்தாளை எடுத்தான்,

வேலை கேட்டு இந்தப் பங்களாவுக்கு வந்தபோது முதலாளி ஆனந்தரங்கம் கேட்ட முதல் கேள்வி இதுதான், "என்டா பயலே! முன்னே வேலை செஞ்ச இடத்திலேருந்து ஏன் வந்திட்டே? ஏதானும் திருடினீயா?" என்று கேட்டார்.

"ஐயா, அந்த மாதிரி அற்ப ஜாதிக்கு நான் பிறக்கல்லீங்க. முந்தி வேலை பார்த்த இடம் செயலில்லாமல் போயிட்டுது. நானே நிலைமையைப் புரிஞ்சு, அவங்ககிட்டே சொல்லிக்கினு வந்திட்டேனுங்க. என்னை நம்பினால் வேலை கொடுங்க; நாணயமாய் நடப்பேன். இல்லாட்டா, நான் வந்த வழியே போறேன். கையிருக்கு. மூட்டை தூக்கி உழைச்சுப் பிழைப்பேனுங்க. என் விதி நான் அநாதையாய்ப் போயிட்டேன்!..." என்று வேதனை மூள வெளியிட்டான்.

அசந்துவிட்டார் முதலாளி. "பேஷ்! நீ பொளைச்சுக்கவே!" என்று பாராட்டி வேலை கொடுத்தார்.

பாபு, கண்களைத் துடைத்துக்கொண்டு, தலையை நேர்மையுடன் நிமிர்த்தினான்.

இப்போது அவன் பிஞ்சுக்கரங்களில் அந்த ஒரு ரூபாய் இருந்தது. அம்மாவிடம் அதைச் சமர்ப்பிக்க எண்ணித் திரும்பினான்.

அப்போது:

அபயாம்பாள் எதிர்ப்பட்டாள்.

"அம்மா, இந்த ஒரு ரூபாய் இங்கே தரையிலே விழுந்து கிடந்துச்சுங்கம்மா!" என்று சொல்லி, பணத்தை மரியாதை யுடன் நீட்டினான் பாபு.

அச்சிறுவனை மலர்ச்சியுடன் நோக்கினாள் அபயாம்பாள். "இதைத்தான் நான் தேடிக்கினு இருக்கேன்!... பாபு, உன் மாதிரி எல்லாப் பிள்ளைங்களும் இருக்க முடியாது. இந்தா, இதை நீ வச்சுக்க. ஆசையாய் வந்தா, ஏதானும் வாங்கிச் சாப்பிடு!" என்று சொல்லி, அந்நோட்டைத் திரும்ப வும் பாபுவிடம் நீட்டினாள் எஜமானி.

பாபுவின் மேனி நடுங்கத் தொடங்கியது; கண்ணீர் வழிந்தது. "இந்த அநாதைக்கு உங்க அன்பு இருந்தா போதுமுங்க. பணத்தை நீங்களே வச்சுக்கங்க!" என்று செருமினாள்.

அபயாம்பாளின் கண்கள் கலங்கிவிட்டன. "நீ ஒரு தனிப் பிறப்பப்பா!... ஆமா, சாப்பிட்டியா என்ன? மூஞ்சி ஓரே களைப்பாய் இருக்கே!" என்று பாசத்துடன் கேட்டாள்.

"பசிக்கல்லேங்க. இன்னம் சாப்பிடல்லேங்கம்மா!"

"அட கடவுளே, எவ்வளவு நாழி ஆச்சு! சரி சரி, வா, நான் சாதம் போடுறேன்!"

ஒரு பிடி அதிகமாகவே சாப்பிட்டான் பாபு.

இல்லாவிட்டால், அப்படி பலத்த ஏப்பம் புறப்படுமா?

*     *     *

காப்பித்தூள் வாங்குவதற்குக் கடைவீதிக்கு வந்தான் பாபு; தூள் வாங்கிக்கொண்டு திரும்புகையில், தமிழக அரசுப்பரிசுச் சீட்டுகள் விற்பனை ஆகிக்கொண்டிருந்த கடைகளைப் பரிதாபத்துடன் பார்த்துக்கொண்டே வந்தான்.

வெயில் தணிந்த வேளை.

அப்போது, 'எங்க சீட்டுக்குப் பரிசு பெருந்தொகையா விழுந்தாக்க, தெருப்பிள்ளையாரப்பனுக்கு ஒரு தேங்காய் சிதறுகாய் விடறதாய் நாங்க மூணு பேரும் நேந்துகிட்டிருக்கோம்!' என்று காசி அண்ணன் சொன்ன தாக்கல் அவனுக்குச் சிரிப்பை வரவழைத்தது.

அப்பொழுது பாபுவின் மனத்தில் ஒரு ரூபாய் ஒரு பிரச்சினையாக இருந்தது. 'ஒரு ரூபாய் எப்படிக் கிடைக்கும், எப்படிச் சம்பாதிப்பது?' என்று வெகுதூரம் மூளையைப் போட்டுக் குழப்பிக்கொண்டான்; தன் எஜமானி அம்மாள் அன்புடன் — ஆதரவுடன் — பாசத்துடன் உணவு பரிமாறிய அக்காட்சியை அவன் உயிருள்ளமட்டும் மறக்கவே மாட்டான்! 'என் கடமையை அவங்களுக்கு என் ஆயுளில் செஞ்சாகணும். அப்பத்தான் எனக்கு நிம்மதி கிடைக்கும்!' என்றும் தீர்மானம் செய்துகொண்டான்.

ஒரு சமயம், இதே மண்ணடி வீதியில் செட்டிமார் விடுதியிலிருந்து கப்பலடிக்குச் சாமான் சுமந்து சென்று கூலியாக ஒரு ரூபாய் சம்பாதித்த சம்பவம் மின்னல் காட்டியது. உடனே, கடவுளை எண்ணித் தொழுதான். கையிலிருந்த காப்பித்தூள் பொட்டணம், அவன் நினைவில் இல்லாமற்போயிற்று. நடந்தான்.

என்ன அதிசயம்!

விடுதியின் வாசலில் நின்ற செட்டியார் ஒருவர், "தம்பி, துறைமுகம்வரை இந்தப் பெட்டியைத் தூக்கிக்கிணு வாரீயப்பா? கேட்கிற பணம் தாரேன்! சோதனை போல ஒரு ரிக்ஷாவைக்கூடக் காணோம்!" என்றார்.

பாபு மாட்டேன் என்பானா?


"ஓ!"

"சரி, தூக்கு!"

பெட்டி என்ன கனம்!

பாபு மூச்சைப் பிடித்துக்கொண்டு, பெட்டியைத் தலையில் சுமந்தபடி நடந்தான். மூச்சு முட்டியது. கெட்டியாகப் பற்றிக்

கொண்டான். மூச்சை விட்டுவிட்டால், அப்புறம் அவன் 'கனவு' என்னாவதாம்? வேர்த்துக் கொட்டியது. கொட்டட்டுமே! அவன் உழைப்பாளி வர்க்கந்தான்!



செட்டியார் சேர வேண்டிய இடத்தில் நின்றார்; பெட்டியை இறக்கி வைப்பதில் அவனுக்கு உதவவும் செய்தார். சந்தனப் பொட்டு பளிச்சிட்டது. ''நல்ல பிள்ளை!'' என்றார்.

சிறுவன் பாபு அவரை விரயமாகப் பார்வையிட்டான்.

'ஐஸ்' வைக்கிறாரோ?

''தம்பி, எம்புட்டுப் பணம் வேணும்?''

''நீங்க கொடுங்க, ஐயா!''

''நல்ல பிள்ளையப்பா! ஒரு ரூபாய் போதுமா?''

''ஓ!''

இப்பொழுது ஏழை—அநாதைச் சிறுவன் பாபுவின் கையில் ஒரு ரூபாய் நோட்டு இருந்தது. அவனுக்கு அக் காட்சி கனவு போலத்தான் இருந்தது. செட்டியார் ஐயாவுக்கு நன்றி சொல்லிவிட்டு நடந்தான். அப்போதுதான் காப்பித்தூள் ஞாபகம் சிலிர்த்தது. அவன் உடம்பு சிலிர்த்துவிடும் போலிருந்தது. நல்ல காலம், அது அவன் பையில் இருந்தது. நேராக நடந்தான். வேர்வையை வழித்துவிடக்கூடாதோ?

அடுத்த கடையை நாடினான். பலனில்லை. மீண்டும் மடங்கினான்.

ஏழை என்றால், அதிர்ஷ்டம் இருக்கக்கூடாதென்று விதி இல்லை; சட்டமும் இல்லை!

அப்போது, பாபுவின் கையில் ஓர் அழகான பரிசுச்சீட்டு தரிசனம் கொடுத்துக்கொண்டிருந்தது!

## உயிர்

எவ்வளவு வேகமாக ஓடுகிறது காலம்!...

இடையிலிருந்த நாலைந்து நாள் பொழுதும் யாதொரு சோதனையும் இல்லாமல் விடிந்தது.

காசி அண்ணன் குழாம் எந்த நேரத்திலும் அப்பங்களாவை விட்டு வெளியேற நேரிடுமென்று எதிர்பார்த்திருந்தது.

பாபுவுக்கு அதைப்பற்றிய விசாரம் துளியாவது இருக்க வேண்டுமே! ஊஹூம், இல்லை! இல்லவே இல்லை!

மத்தியான்னம் சாப்பிட்டுவிட்டு, ஒரு தூக்கம் போட்டான்; பிறகு எழுந்தான், மெதுவாக வெளிப்பக்கம் வந்தான் பாபு; முன்பு வந்த மாதிரி ஆட்டுக்குட்டியொன்று தோட்டத்தை அளப்பதைக் கண்டான்; 'தாத்தா!' என்று குரல் கொடுத்தான்.

துளசிங்கம் சுரத்து இல்லாமல், 'கடனே' என்பது போல் ஆட்டுக்குட்டியை நோக்கி அன்னநடை நடந்துகொண்டிருந்தார்.

அந்த ஆட்டுக்குட்டிக்கு மேலைநாட்டுப் பூஞ்செடிகளென்றால், என்ன தான் பிரியமோ?

துளசிங்கம் தாத்தாபேரில்தான் பாபு சினம் கொண்டான்,

முதலாளி வீட்டில் இருக்கிறார். ஆட்டுக்குட்டியின் விளையாட்டைப் பார்த்துவிட்டால், பாவம் தாத்தாவுக்குச் சீட்டு கிழிந்துவிடுமே!

பாபு விரைந்தான்; ஆட்டுக்குட்டியை விரட்டினான். "தாத்தாவுக்குப் பரிசுச்சீட்டுக் கனாதான் போலே சதாவும்!" என்றான் அவன்.

தாத்தாவுக்குப் பற்கள் தெரிய சிரிப்பு வெடித்தது.

ஒரு வேளை, அவர்கள் வாங்கியிருக்கும் சீட்டுக்குப் பரிசு விழுந்துவிடுமோ, என்னவோ?

விழட்டும் விழட்டும்!

அவர்கள் மூவருக்குந்தான் பற்கள் கெட்டியாச்சே!

"பாபு, இண்ணிக்குத்தான் சீட்டு குலுக்கிக்கிட்டு இருக்காங்க! எங்க அதிர்ஷ்டம் எப்படி இருக்கோ?" என்று அங்கலாய்த்தார் கிழவர்.

ஒரே ஒரு ரூபாய் எவ்வளவு பெரிய கனவைக் காட்டுகிறது!

பாபுவுக்கு அச்செய்தி நினைவில் இருந்துகொண்டுதான் இருந்தது. என்றாலும், அதைப்பற்றி அவன் துளிகூட ஆசைக்கனவு கொள்ளவில்லை; நேர்மையான ஆசை மட்டுமே கொண்டிருந்தான். அவன் சீட்டு வாங்கிய விஷயத்தையும் காசி அண்ணனுக்குக்கூட வெளிக்காட்டவில்லை. காசி அண்ணன் சிரிப்பார்! சொல்லாமல் இருப்பது பொய்யோ? — இப்படி ஒரு கவலை எழுந்தது. 'அது பொய்யல்ல!' என்றும் துணிவு பெற்றான். 'வாங்கினாயா?' என்று கேட்டு, 'இல்லை' என்றால்தானே பொய்யாகும்? கேட்காமல் இருக்கும்போது, எதற்காக முந்திரிக்கொட்டை போல விவரம் கூற வேண்டும்?

தாத்தா கனவு காண்பதை நிறுத்தவில்லை.

ஆகவே, அவரது இன்பக்கனவில் குறுக்கிட மனமில்லாமல், பாபு தன் இருப்பிடத்தை அடைந்தான்; பரணிலிருந்த காந்திஜியின் பொன்மொழிகள் புத்தகத்தில் செருகி வைத்திருந்த அந்தப் பரிசுச்சீட்டை எடுத்தான்; கண்களில் ஒற்றிக்கொண்டான். அவன் கைகள் தாமாகவே தொழுதன. ஒரு கணநேரம், இனிய சிரிப்பொன்று அவனையும் அறியாமல் உதடுகளில் விளையாடியது. சீட்டைப் பத்திரமாக இருந்த இடத்தில் வைத்தான். சிறிய பென்சில் ஒன்று விழுந்தது. அதையும் உரிய இடத்திலே நிதானமாக எடுத்து வைத்தான்; அன்றைக்கு மதியத்திலே எஜமானரும் எஜமானியும் வருத்தத்துடன் பேசிக்கொண்டிருந்த நடப்பையும் நினைவூட்டிக் கொண்டான். 'முதலாளிக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசு விழுந்தாக்க, எவ்வளவோ சிலாக்கியமாயிருக்கும்; கடன்

அடைஞ்சிடும்; இந்தப் பங்களாவும் மிஞ்சிவிடும்!...' ஏக்கம் கொண்டது அக்குழந்தை உள்ளம்.

என்னவோ தோன்றியது; வேகமாகத் தோட்டத்தை அடைந்தான் பாபு; முன்னால் தெரிந்த பங்களாவை மேலும் கீழும் பார்த்தான். 'இத்தனை பெரிய பங்களாவைக் கடனுக்கு அடைச்சிட்டு, ஐயாவும் அம்மாவும் வேறே ஊருக்குப் போய் வாடகை வீட்டிலே இருக்கிறதா?... எப்படி அவங்க மனசு தாளும்?...' என்று துயரமடைந்தான் அநாதைச் சிறுவன்.

ராமனும் சீதையும் பஸ்ஸில் பள்ளிக்குச் சென்றிருக்கிறார்கள்; ஐந்து மணிக்குத் திரும்புவார்கள். அவர்களாகவே பஸ் ஏறி, அவர்களாகவே பஸ்ஸிலிருந்து இறங்கி வந்து சேருவார்கள்; பழகிவிட்டார்கள்.

மணி இப்போது என்ன?

பாபு பழைய ஞாபகத்தில் நடைக்கு வந்தான். ஆசையோடு பூஞ்சிட்டுக் கடிகாரத்தைத் தேடினான்; அதைக் காணாமல், மீண்டும் ஏங்கினான்.

'மணி அஞ்சாயிடுச்சு. பசங்க வர நேரமாச்சு!' என்று முதலாளி தன் மனைவியிடம் சொல்லிக்கொண்டிருக்கையில், பாபு எட்டிப் பார்த்தான்: "நான் பஸ் ஸ்டாப்புக்குப் போய் அழைச்சுக்கிட்டு வரட்டுங்களா?" என்று மரியாதையுடன் கேட்டான்.

"வேண்டாப்பா. நீ இரு. வேலை இல்லைன்னா, தோட்டத்தைப் பார்த்துக்க. கிழவன் பகலிலேகூடத் தூங்குவான்!" என்று சொல்லிவிட்டுக் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். "இன்னும் கொஞ்ச நேரத்திலே சீட்டுக்குலுக்கலின் முடிவு தெரிஞ்சிடும். ரேடியோவிலே சொல்லிடுவாங்க. எதுக்கும் நம்ப சீட்டுகள் எல்லாத்தையும் எடுத்து வைச்சுக்க, அபயம்!" என்றார் ஆனந்தரங்கம் அவர்கள்.

அபயாம்பாள் தலையை ஆட்டினாள்.

பாபுவின் நினைவு தன் சீட்டுக்கு ஓடியது. ஓட்டமென்றால், நாலு கால் பாய்ச்சல்தான்!

அம்மாவும் ஐயாவும் மாடிக்குப் போனார்கள்.

பாபு முக்காலியில் கிடந்த பத்திரிகையைப் புரட்டினான்.

காந்திஜி நூற்றாண்டு விழாவை ஒட்டிய படங்களை ரசித்தான் அவன். "பாபுஜி!... பாபுஜி!" என்று அவன் நெஞ்சம் முணுமுணுத்தது. ஓரிடத்தில் கொட்டை எழுத்துகளில் அச்சாகியிருந்த கட்டத்தைப் படித்தான்.

**"மனிதனுடைய உயிரைவிட ஆட்டுக்குட்டியின் உயிர் எந்த விதத்திலும் தாழ்ந்ததன்று!"**

எவ்வளவு அற்புதமான உண்மை! காந்திஜியால்தான் இத்துணை தெளிவுடன் உரைக்க முடியும்! உலகை உணர்ந்த மகான் ஆயிற்றே!

ஆட்டுக்குட்டி பாபுவின் இதயத்தில் உயர்ந்த இடம் பிடித்துக்கொண்டது.

குதித்துக்கொண்டு ராமனும் சீதையும் 'கான்வென்டி' லிருந்து திரும்பினர்.

திரும்பிப் பார்த்தான் பாபு.

மிகவும் களைப்புடன் தோன்றினர் ராமனும் சீதையும்.

'ஸ்டுடிபேக்கர்' வண்டியில் அவ்விருவரையும் இட்டுச் சென்று மீண்ட நாள்கள் சொப்பனம் போலிருந்தது பாபுவுக்கு.

"பாபு, இந்தா பிஸ்கட்!" என்று கூறி, ரொட்டியை பாபுவுக்குக் கொடுத்தான் ராமன்.

கஷ்டங்கள் இல்லையென்றால், உலகம் பிடிபடாதோ?

சீதைதான் இயல்பிலேயே இரக்கச் சிந்தை பெற்ற சிறுமி ஆயிற்றே! அவள் பங்கும் பாபுவுக்குக் கிட்டியது.

பாபுவுக்குத் தலைகால் புரியாத மகிழ்வு. அவர்கள் தன்னைப் புரிந்துகொண்டனரே என்றோ, என்னவோ?

காசி அண்ணன் வந்து நின்றார். அவரது உள்ளங்கையில் நெல்லிக்கனி இல்லை. அதற்குப் பதிலாகப் பரிசுச் சீட்டு இருந்தது.

மாடியில் ரேடியோ அலறியது.

பரிசு விழுந்த சீட்டுகளின் எண்கள் படிக்கப்பட்டன.

காசியோடு பாபுவும் தொடர்ந்தான்.

காசியின் சீட்டுக்குப் பரிசு இல்லை. ஆயிரம், நூறு இருந்தால்தான் உண்டு!

ஆனந்தரங்கத்தின் அத்தனை சீட்டுகளும் பயன் தரவில்லை! சில்லறைத் தொகை வந்து உப்புக்கு ஆகப் போகிறதா, புளிக்கு ஆகப் போகிறதா?

* * *

'பலே, பாண்டியா!' என்றால், அப்பட்டம் பாபுவுக்கு மிகவும் பொருந்தும்,

பாபு இப்போது கடைவீதியில் நின்றான்; யாரோ ஒரு புண்ணியவான் வாங்கியிருந்த மாலைப் பதிப்பில் லாகவமாகப் பார்வையைப் பதித்தான். அவனது பிஞ்சு நெஞ்சு அடித்துக் கொண்டது. அவன் நினைவு ஆண்டவனைச் சரணடைந்திருந்தது. அவனது இதயத்தில் பாபுஜி வீற்றிருந்தார். வரிசையாகப் பார்வையிட்டுக்கொண்டே வந்தான். அவன் வாங்கியிருந்த சீட்டின் இலக்கங்களை மனப்பாடம் செய்து வைத்திருந்தான்; ஆகவே, பதற்றத்துடன் பரிசு பெற்ற எண்களைக் கவனித்தான், ஏமாற்றம் ஏற்பட்டது. பத்திரிகையின் பின்புறத்தைப் புரட்டியதும், அவன் மனம் மீண்டும் எம்பியது; தணிந்தது. மறுகணம், அவன் 'ஆ!' என்று தன்னையும் மறந்து அலறிவிட்டான். கூட்டத்திலிருந்த மக்கள் அவனைச் சூழத் தொடங்கியதையும் சட்டை பண்ணவில்லை; சட்டைப்பையிலிருந்த துண்டுக் காகிதத்தை வெளியில் எடுத்தான்; அவன் பார்த்த எண்களுடன் சரி பார்த்தான்; "பகவானே!... பாபுஜி!" என்று கூவியவனாக அவ்விடத்தை விட்டகன்றான்.

பாபு இப்போது 'தமிழ் அன்னை' இல்லத்தை நோக்கிப் பறந்துகொண்டிருந்தான்.

அதோ, பங்களா !

பெருமையுடனும் பெருந்தன்மையுடனும் அவன் அப்பங்களாவைக் கம்பீரமாக நோக்கினான்; மறுபடியும் நடந்தான். வாசலின் திருப்பத்தில் வந்தபோது, ஆட்டுக்குட்டி ஒன்று, குறுக்கிட்ட காரில் மோதிவிட இருந்தது. உடனே பாய்ந்து, அந்த ஆட்டுக்குட்டியைத் தாவிப் பிடித்துக் கொண்டான்.

ஆட்டுக்குட்டி பிழைத்தது.

பாபுவுக்கு மண்டையில் நல்ல அடி, இரத்தம் பீறிட்டது; விளக்கு வெளிச்சத்தில் நன்றாகத் தெரிந்தது.



கைவேலையாக வந்த காவேரி சத்தம் போட்டாள்.

ஆனந்தரங்கமும் அபயாம்பாளும் ஓடோடி வந்தார்கள்; கண் கலங்கினார்கள்.

ராமனும் சீதையும் விம்மினர்.

காசி தண்ணீர் கொணர்ந்து, அநாதை ஏழைச் சிறுவன் பாபுவின் முகத்தில் தெளித்தார்.

பாபு கண்களைப் பாங்குடன் திறக்கலானான்.

"பாபு !..."

குரல்கள் பல பாசத்துடன் கிளம்பின.

"எனக்கு ஒண்ணுமில்லீங்க. உங்க எல்லாரோட அன்புக்கும் ரொம்பக் கடமைப்பட்டிருக்கேனுங்க !" என்று தேம்பியபடி எழுந்தான் பாபு. பச்சை இலை ஒன்றைப் பிழிந்து காசி புண்ணில் ஊற்றினார். 'அப்பா — அம்மா!' என்று விம்மினான்.

"டாக்டரைக் கூப்பிடட்டுமாப்பா?"

மாறி மாறி, 'தமிழ் அன்னை' பெருமனையின் தம்பதியர் கேட்டனர்.

"அதெல்லாம் இந்த ஏழைப் பிள்ளைக்கு வேணாமுங்க, உங்க அன்பு இருந்தால் அதுவே போதும். என்னோட புண் தன்னாலே ஆறிப் போயிடுமுங்க !" என்று அவர்களைக் கையெடுத்துக் கும்பிட்டான் பாபு. கண்கள் மடை திறந்தன.

"சரி, நீ போய்க் கொஞ்ச நாழி படுத்துத் தூங்குடா. பாபு !"

திருவாளர் ஆனந்தரங்கம் ஆணை பிறப்பித்தார்.

அபயாம்பாள் பரிவுடன் பாபுவின் நெற்றியைத் தடவி விட்டாள்.

பாபு தன் இருப்பிடத்தை அடைந்தான்

* * *

பூசைக்கூடத்தில் ஆனந்தரங்கமும் அவர் துணைவி அபயாம்பாளும் இருந்தனர்.

பூஜை முடிந்த வேளை.

பாபு மரியாதையுடன், 'ஐயா !' என்று விளித்து, "உங்களுக்கு யாரோ ஒருத்தர் ஒரு லெட்டர் கொடுத்திட்டுப் போனாருங்க, ஐயா !" என்று சொல்லி உறைக்கடிதம் ஒன்றைக் கொடுத்தான்; பிறகு, அங்கிருந்து நகர்ந்தான். அவனது பால் வழியும் முகத்திலேதான் எத்துணை தெய்விக ஒளி !...

ஆனந்தரங்கம் கல்வரத்துடன் அக்கடிதத்தின் உறையைக் கிழித்தார். 'யார், என்ன?' என்று கடிதத்தின் விவரம் அறிய அவருக்கும் தோன்றவில்லை. பாபுவும் அங்கு நிற்கவில்லை!

கடிதம் பேசுகிறது.

ஆம்; கடிதத்துக்குப் பேசத் தெரியும்.

சாமான்யமான கடிதமா அது?

பென்சிலால் எழுதப்பட்டிருந்தால், என்ன?

அக்கடிதம் பேசுவதைக் கேட்கின்றீர்களா?

"ஐயா அவர்களுக்கு,

அறுபத்தஞ்சு நாள், நான் உங்கள் உப்பைத் தின்றேன். அந்த உப்பானது எனக்கு ஒரு கடமையைப் படிச்சுக் கொடுத்தது. நீங்களும் அம்மாவும் பிள்ளைங்களும் பழைய மாதிரி நிம்மதியோடு வாழ வேணுமென்று ஆண்டவனைக் கும்பிட்டேன். என்னுடைய பிஞ்சு மனசிலே ஒரு பெரிய கனவு தோணிச்சு. மூட்டை சுமந்தேன், ஒரு ரூபாய் கிடைச்சுது. பரிசுச் சீட்டு ஒண்ணு வாங்கினேன், உங்க பேருக்கு. அதுக்கு முதல் பரிசு லட்ச ரூபா விழுந்திருக்கு. மண்ணடி தபாலாபீசுக்குப் பக்கத்து மருந்துக் கடையிலே வாங்கின சீட்டுங்க!... உங்க பங்களா உங்களோடதாகவே எப்பவும் இருக்க வேணும்! பகவான் நம்பளைக் காப்பாத்திவிட்டார்!... பரிசுச்சீட்டையும் இத்தோடு வைத்திருக்கிறேன். அம்மாவுக்கு — என்னோட தாய்க்கு — என் வணக்கம். இந்த ஏழை அநாதைச் சிறுவனை நீங்களெல்லாம் மறந்திட

மாட்டீங்களே ! உலகம் ரொம்பப் பெரிசு
அப்படின்னு சொல்றாங்க ! அப்படிப்பட்ட
பெரிய உலகத்திலே இந்த அநாதைக்கு
ஓர் இடம் கிடைக்காமலா போயிடும்!
மகாத்மா காந்தியின் பொன்மொழிகளை
யும் தாங்கள் என்மீது காட்டிய இரக்கத்
தையும் வாழ்வில் மறக்க மாட்டேன் !

பாபுவை மறந்துப்பிட மாட்டீங்களே!

என்னைத் தேடிப் பயனில்லை !

நான் போய் வருறேன் !—

ஆமா — போயிட்டு வருறேன் !

இப்படிக்கு,
ஏழை அநாதையான
"பாபு."

'தமிழ் அன்னை' பெருமனையின் தலைவரும் தலைவியும் மாலை மாலையாகக் கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தார்கள். "பாபு ! நீ தெய்வப் பிள்ளையடா !... முருகன்தான் உன் ரூபத்திலே வந்து விளையாடியிருக்கான் !... முருகா !... எங்க பாபுவை மறுபடியும் எங்ககிட்டே கொண்டாந்து சேர்த்துப்பிடு. தெய்வமே!... பாபு!" என்று புலம்பினாள் அபயாம்பாள்.

நீலப் பாதரச ஒளியிலே, அந்தப் பரிசுச்சீட்டு தெய்வமாகச் சிரித்துக்கொண்டேயிருந்தது ! ...

ஏஷியன் அச்சகம், சென்னை - 600 014.